# பண்பு தரும்
# அன்புக் கதைகள்



டாக்டர்.எஸ்.நவராஜ் செல்லையா

M.A,M.P.Ed;Ph.D.D.Litt;D.Ed;FUWAI

### உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

### Universal (CC0 1.0) Public Domain Dedication

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# பண்பு தரும் அன்புக் கதைகள்

டாக்டர் எஸ். நவராஜ் செல்லையா
M.A., M.P.Ed., Ph.D., D.Litt, D.Ed., FUWAI

சாந்திமலர் பதிப்பகம்,
8, போலீஸ் குவார்ட்டர்ஸ் ரோடு,
தி. நகர், சென்னை - 17
தொலைபேசி: 4332696.

## நூல் விவர அட்டவணை


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | **பண்புதரும் அன்புக் கதைகள்** |
| மொழி | : | தமிழ் |
| பொருள் | : | சிறுவர்களுக்கான நன்னெறிக் கதைகள் |
| ஆசிரியர் பெயர் | : | டாக்டர் எஸ். நவராஜ் செல்லையா |
| பதிப்பு | : | ஜூன் 1999 |
| நூலின் அளவு | : | கிரவுன் |
| அச்சு | : | 14 புள்ளிகள் |
| பக்கங்கள் | : | 88 |
| நூல் கட்டுமானம் | : | அட்டைக் கட்டு |
| **விலை** | : | **18-00** |
| உரிமை | : | ஆசிரியருக்கு |
| தாள் | : | வெள்ளைத்தாள் |
| வெளியிட்டோர் | : | சாந்தி மலர் பதிப்பகம், 8, போலீஸ் குவார்ட்டர்ஸ் ரோடு, தி.நகர். சென்னை - 600 017. ☎ 4332696 |
| அச்சிட்டோர் | : | கிரேஸ் பிரிண்டர்ஸ், 8, போலீஸ் குவார்ட்டர்ஸ் ரோடு, தி. நகர், சென்னை - 600 017. ☎ 4332696 |

# முன்னுரை

''**பண்பு தரும் அன்புக் கதைகள்**'' என்னும் இந்த நூலில் அன்பும் பாசமும் நிறைந்த ஐந்து பேர்கள் இடம் பெற்றிருக்கின்றனர்.

தாய்மேல் பாசம் நிறைந்த மகனாக குகன். தம்பியின் பாசம் நிறைந்த அண்ணனாக தம்புசாமி, தமது மாணவன் மேல் பாசம் நிறைந்த தலைமை ஆசிரியர். தமது தோழன் மேல் பாசம் நிறைந்த தலைவனாக மூர்த்தி. நண்பனிடம் அன்பு காட்டிய குமார்.

அனைவரும் அன்பின் காரணமாக பண்பினைப் பெறுகின்றார்கள். அன்பும் பண்பும் வாழ்க்கையில் முகத்திற்கு இரு கண்கள் போல. உடலுக்கு இரு கரங்கள் போல. வாழ்க்கை வண்டிக்கு இரு சக்கரங்கள் போல.

மாணவர்கள் இளம் பருவத்திலேயே சிறந்த பண்புகளைப் பெற வேண்டும் என்றே எல்லோரும் விரும்புகின்றனர். அத்தகைய விருப்பத்தை நிறைவேற்றும் நோக்கத்தில் எழுந்த ஐந்து கதைகளும், குழந்தைகள் ஆண்டினைக் கொண்டாடும் 1979ம் ஆண்டில், நல்ல திருப்பத்தை அளிக்கும் என்ற நம்பிக்கையில் தான் நூலாக மலர்ந்திருக்கின்றன.

எளிமையான தமிழில், சரளமான நடையில் கதைகள் கூறப்பட்டிருக்கின்றன. பள்ளி மாணவர்கள் விரும்பிப் படிக்கும் வகையில் நூல் உருவாக்கப் பட்டிருக்கின்றது.

ஆசிரியர்களும் மாணவர்களும் இந்நூலை ஏற்று ஆதரித்து, பயன் தருமாறும், பயன் பெறுமாறும் உங்கள் கரங்களில் படைக்கிறோம்.

லில்லி பவனம் — **டாக்டர் எஸ். நவராஜ் செல்லையா.**
சென்னை - 17


## உள்ளே . . .


1. நல்ல மனம்
2. நல்ல தம்பி
3. நல்ல மாணவன்
4. நல்ல தலைவன்
5. நல்ல பரிசு

# 1. நல்ல மனம்

* ராமா! ராமா!

வீட்டிற்குள்ளிருந்து கூப்பிடும் குரல் கேட்டது. இவ்வளவு சத்தமாகக் கூப்பிடுவது யாராக இருக்கலாம் என்று ராமனுக்கு சந்தேகம்



எப்பொழுதுமே வராது. அவனது எசமானி யசோதை அம்மாளின் குரல் என்பது, அந்தக் கணீர் என்ற குரலைக் கேட்டாலே புரிந்துவிடும்.

பத்து வீட்டிற்கு அப்பாலும் கேட்கும் படி கத்திக் கூப்பிடும் எசமானியின் அழைப்புச் சத்தம் கேட்ட போது, ராமன் தண்ணீர்க் குழாயைக் கையில் பிடித்தபடி, தோட்டத்தில் பூச் செடிகளுக்குத் தண்ணீர் பாய்ச்சிக் கொண்டிருந்தான்.

மீண்டும் ஒரு அலறல் குரல். ராமன் தண்ணீர்க் குழாயைத் தரையில் அப்படியே போட்டு விட்டு வீட்டிற்குள் ஓடினான்.

யசோதை எதிரே வந்து நின்றாள்.

ராமா! எத்தனை தடவை கூப்பிடுறது! கூப்பிட்ட குரலுக்கு வராமலிருந்தா, நீ இங்கே இருந்துதான் என்ன பிரயோசனம்?

'இனிமே, உடனே வந்துடுறேம்மா!' ராமன் தாழ்ந்த குரலில், தணிந்து போய் கூறினான்.

'அய்யா அவசரமாக வெளியே போகனும். அதற்குள் இந்தச் சீட்டில் இருக்கும் மருந்தை வாங்கிக் கொண்டு வா! ரொம்ப அவசரம்!

என்று கூறியவாறு, அவனது கையில் பணத்தையும் மருந்துச் சீட்டையும் தந்தாள்.

'எந்த மாதிரி வேலையாயிருந்தாலும் செய்யத்தானே இருக்கிறேன். அதனால் தானே எனக்கு வேலைக்காரன்னு பேரு' என்று மனதுக்குள் சொல்லிக் கொண்டே திரும்பினான் ராமன்.

'இந்தா பாரு ராமா! மசமசன்னு நடக்காதே... அங்கே இங்கேயும் வேடிக்கைப் பார்க்காதே! யார் கிட்டேயும் நின்னு அரட்டை அடிச்சிக்கிட்டிருக்காதே! போனமா வந்தமான்னு இருக்கனும், புரியுதா?' என்று ஒரு பிரசங்கமே பண்ணினாள் யசோதை!

''இதோ ஒரு நிமிடத்துல ஓடி வந்துடறேம்மா'' என்று தன் நடையில் வேகத்தைக் காட்டினான் ராமன்.

ஓட்டமாக ஓடிப்போய் திரும்பி வரத்தக்க வயதுள்ள வாலிபனுமல்ல...தட்டுத் தடுமாறித் தள்ளாடி நடக்கும் வயோதிகனுமல்ல ராமன். சுமார் நாற்பது வயது மதிக்கத்தக்க மனிதன்.

நடுத்தர வயதுடைய ஆளாக இருந்தாலும், வறுமையில் வதங்கியதன் காரணமாகவும்,

ஓயாத உழைப்பின் காரணமாகவும் மிகவும் இளைத்தும் களைத்தும் காணப்பட்டான்.

அந்த வீட்டில் ராமன் தோட்டக்காரன் மட்டுமல்ல, வேலைக்காரன், எடுபிடி. சமயத்தில் கணக்குப் பிள்ளையாகவும் கூட இருப்பான்.

ஏதோ ஒரு வேலைக்காக, எசமானி யசோதையும், எசமானர் வாசுதேவனும், அடிக்கடி ராமனைக் கூப்பிட்டுக் கொண்டுதான் இருப்பார்கள். ராமன் இல்லையென்றால், தம்பதியர் இருவருக்கும் எந்த வேலையும் ஓடாது.

நல்ல வசதியுள்ள குடும்பத்தில் பிறந்தவர்கள் யசோதையும் வாசுதேவனும், வாசுதேவன் ஒரு பெரிய கம்பெனியில் மேனேஜராக வேலை பார்க்கிறார். ஆயிரக் கணக்கில் சம்பளம். சொந்தமா பெரிய வீடு. கார், மோட்டார் சைக்கிள் போன்ற வாகன வசதிகளும் உண்டு.

கணவன் மனைவி இருவரும் அதிக ஆனந்தமாகவே வாழ்ந்து வந்தார்கள். அவர்கள் இருவரைத் தவிர அந்த வீட்டில் வேறு யாரும் இல்லை. ராமனும் சாதாரண வேலைக்

காரனாகவே அந்த வீட்டில் புகுந்து, பல ஆண்டுகள் உழைத்து, இன்னும் வேலைக்காரப் பையனாகவே இருக்கிறான். சம்பளத்தில் அதிகம் கூட வில்லை யென்றாலும், வீட்டைப் பாதுகாத்து, எசமானியும்மாளுக்குத் துணையாக இருந்து, எடுபிடி வேலை செய்யும் வேலைகள் தான் அதிகமாக் கூடி விட்டிருந்தன.

மருந்தை வாங்க அனுப்பி வைத்திருந்த யசோதை, சமையலறைக்குள் புகுந்து, சகல காரியங்களையும் மிகவும் சிரத்தையுடன் செய்யத் தொடங்கி விட்டாள். வாசுதேவன் குளியறைக்குள் நுழைந்து கொண்டார். வீட்டில் ரேடியோ சத்தம்மட்டும் இசை பரப்பிக் கொண்டிருந்தது.

வேகமாக ஓட முடியாமலும், மெதுவாக நடந்து போக மனமில்லாமலும், உள்ளத்தால் வேகமாகவும்நடையில் மெதுவாகவும் ராமன் சாலையிலே போய்க் கொண்டிருந்தான்.

மருந்துச் சீட்டைக் கையில் வாங்கிக் கொண்டதும், அவனது மனதில் முதலில் நிழலாடிய நினைவு, அவனது மனைவி சீதையைப் பற்றித்தான். அவனது மனைவி பிய்ந்து கிடக்கும் தன் குடிசைக்குள்ளே, கிழிந்து

போன கோரைப் பாயின்மேல், தீராத காய்ச்சலுடன் துன்பப் பட்டுக் கொண்டிருக்கும் காட்சி, அவன் மனக்கண் முன்னே வந்து நின்றது.

காய்ச்சலில் அவள் படுத்து ஒரு வாரம் ஆகிவிட்டது. அதற்கென்று மருந்துகள் வாங்கித் தர ராமன் எடுத்துக் கொண்ட முயற்சிகள் எல்லாம், தோல்வியிலேயே முடிந்து போயின.

சீதை இரண்டு மூன்று வீட்டில் காலையும் மாலையும் வேலை செய்து, இருபதோ முப்பதோ கொண்டு வருகிறாள். ராமனுக்கு இன்னும் கொஞ்சம் அதிக சம்பளம். இரண்டு பேர் சம்பளத்தையும் சேர்த்தால் கூட, வாரத்தில் பாதி நாட்கள் தான் சாப்பிட முடியும்!

மீதி நாட்களை, அப்படி இப்படி என்று அரைப் பட்டினியும் கால் பட்டினியுமாக ஒட்டித்தான், காலத்தைக் கழித்து வந்தனர்.

ராமன் சீதை தம்பதிகளுக்கு ஒரே ஒரு மகன் உண்டு. அவனுக்கு, குகன் என்று பெயரிட்டனர். செல்லமாக ராஜா போல வளர்க்க அவர்களுக்கு ஆசைதான். செல்வ நிலைமை அப்படி இல்லையே!

தங்களைப்போல தங்கள் மகனும் வேலைக்காரனாக, கூலிக்காரனாக வாழவே கூடாது! எப்படியேனும் உயர்ந்த படிப்பைப் படிக்க வைத்து, நல்ல உத்தியோகத்தில் இருக்கச் செய்ய வேண்டும் என்பதும் அவர்களுக்கு ஆசை தான். நினைத்ததெல்லாம் அப்படியே நடக்கிறதா என்ன?

எப்படியோ அவர்கள் முயற்சி பலித்தது. தங்கள் கூட இருந்தால், பையனுக்கு படிப்பு ஏறாது என்ற முடிவுக்கு வந்து, அவனைக் கொண்டு போய் ஒரு விடுதியில் சேர்த்து விட ஏற்பாடு செய்தனர்.

உணவு இலவசமாகத் தந்தனர் என்றாலும், மற்ற செலவுகளுக்கு ராமன் தானே குகனுக்குத் தரவேண்டும்!

அடிக்கடி குகனுக்குப் பணம் தேவைப்படும். குறைந்த தேவையைக் கூட பூர்த்தி செய்ய முடியாத நிலைதான். ஆகவே, ராமன் அடிக்கடி தன் முதலாளியிடம் கடன் கேட்க ஆரம்பித்தான். அந்தப் பணத்தைத் தன் சம்பளத்தில் பிடித்துக் கொள்ளச் செய்தான். அதனால் பணம் பற்றாக்குறை ஏற்பட்டது. சாப்பாட்டைக் குறைத்துக் கொண்டு சமாளிப்பான் ராமன்.

அவ்வாறு பட்டினியும் பசியும். இராப்பகல் உழைப்புமாக இருந்த ராமன், ஓடாக இளைத்து வந்தான். இனி மேல் இளைக்க முடியாது என்று எலும்புந் தோலுமாகக் காட்சியளித்தான். இனிமேல் என்னால் தாங்க முடியாது என்று நினைத்தாளோ என்னவோ, சீதை படுத்த படுக்கையாய் நோயில் விழுந்து விட்டாள்.

எவ்வளவு துன்ப ம் வந்தாலும், குகனை நல்ல முறையில் வளர்த்துப் படிக்க வைக்கும் வரை, பொறுத்துக் கொள்ள வேண்டும் என்று அவர்கள் முடிவு கட்டிக் கொண்டு வாழ்ந்தாலும், சீதைக்கு வந்த நோயைத் தீர்க்க, ராமன் எவ்வளவு முயன்றும் முடியவில்லை.

'இந்தாப்பா! மருந்தை வைத்து எவ்வளவு நேரமாகுது. நின்னுகிட்டே தூங்குறியே! பணத்தைக் கொடு' என்று மருந்து கடைக்காரனின் காட்டுக் கூச்சல், ராமனை எழுப்பி விட்டது.

கடையில் முன்னே நின்றுகொண்டு தன் வாழ்க்கையை நினைத்துப் பார்த்துக் கொண்டேயிருந்த ராமன், திடுக்கென்று விழித்தான். மருந்துப் பொட்டலத்தைப் பார்த்தான். கடைக்காரனைப் பார்த்தான். மிரள

மிரள விழித்தான். பக்கத்தில் நின்றவர்களும் கடைக்காரனும் ராமனைப் பார்த்துப் பரிகாசமாக சிரித்தார்கள். ராமனும் பதிலுக்கு அசட்டுச் சிரிப்பைச் சிரித்து விட்டு, பணத்தைக் கட்டி, மருந்தை எடுத்துக் கொண்டு, முயல் வேகத்தில் நினைத்து, ஆமை வேகத்தில் நடந்து வீட்டை அடைந்தான்.

'இவ்வளவு சீக்கிரம் வந்து விட்டாயே ராமா! ரொம்ப சமர்த்து தான்' என்று தன் எசமானி பாராட்டுவாள் என்று நினைத்துக் கொண்டே வீட்டினுள் நுழைந்த ராமனுக்கு, ஓர் அதிர்ச்சி அங்கே காத்துக் கொண்டிருந்தது.

'ராமா இங்கே வா!' யசோதையின் குரலில் கோபம் இருந்தது.

இதோ வந்துட்டேம்மா! என்று மருந்தையும், மருந்துச் சீட்டையும், மீதி சில்லறைக் காசுகளையும் மேசை மீது வைத்தான் ராமன்.

'வீட்டிற்குள் வந்த பிறகு, எவ்வளவு நேரம் இப்படியே நின்று கொண்டிருப்பாய்! உடனே குரல் கொடுக்கக் கூடாதா என்று கொஞ்சம் கோபமாகக் கேட்டாள்.

'நீங்க வந்ததும் தரலாம்னுதான் நின்னுகிட்டே இருந்தேன்' என்று நிதானமாகப் பதில் சொன்னான் ராமன்.

'வீட்டில் இருக்குறது நீ, நான், ஐயா மூன்று பேருந்தானே! நம்ம மூணு பேருக்கும் தெரியாம எப்படி அது காணாம போகும்!

காணாமற் போய்விட்டது என்ற வார்த்தைகளைக் கேட்டவுடனே, தீயை மிதித்தவன் போலத் துள்ளி நின்றான் ராமன்.

''என்னம்மா சொல்றீங்க! நம்ம வீட்டில் திருட்டா?''

''ஆமா! ஐயா குளிக்கப் போறதுக்கு முன்னாலே, கல் பதித்த ஒரு மோதிரத்தைக் கழற்றி, மேசைமேல் வைப்பார்னு உனக்குத் தெரியுமா இல்லியா? ''

நல்லா தெரியுமே!

''அந்த மோதிரத்தைத் தான் இப்ப காணோம்! இத்தனை நாள் இருந்தது இன்னைக்கு மட்டும் எப்படி காணாமல் போகும்?

''எனக்குத் தெரியாதும்மா! நான்

கடைக்குப் போய்ட்டு இப்பத்தானே வர்ரேன்! சத்தியமா நான் எடுக்கலே! எனக்குத் தெரியாதும்மா!''

''ஒன்னு, ஐயா எடுத்துருக்கனும்! இல்ல நான் எடுத்திருக்கனும். இல்லேன்னா...''

யசோதை பேச்சை முடிப்பதற்குள், வாசுதேவன் பேசலானார்.

''யசோதை! அப்படியெல்லாம் பேசக் கூடாது. நானே தான் மோதிரத்தை இங்கே வச்சேன். காணாமல் போச்சுன்னா தேடிக்கண்டு பிடிக்கணுமே தவிர, வாய்க்கு வந்ததெல்லாம் பேசக் கூடாது.''

நாம பேசாம இருந்தா, இப்படித்தான் ஒன்ணு ஒண்ணா காணாம போய்கிட்டே இருக்கும்!

''என்மேல நீங்க சந்தேகப்படுறீங்களாம்மா? உடல் கூனிக்குறுக நின்று கேட்டான் ராமன். அவனது கண்கள் தரையைப் பார்த்துக் கொண்டேயிருந்தன. அவனது பாதங்களை நன்றாக உற்றுப் பார்த்தவன், அப்படியே தன் உடம்பை கொஞ்சமாக மேலே பார்த்துக் கொண்டே வந்தான்.

நரம்புகள் வீங்கிப் புடைத்துக் கோடு கோடாகத் தெரியும் பாதங்கள். நீரில்லாத ஏரியின் தரை வெயிலிலே வெடித்திருப்பது போன்று தோலின் அமைப்புகள். குச்சி போன்ற கால்களை மூடி மறைத்திருக்கும் தையல் போட்ட கால் சட்டை. தொய்க்காமல் அழுக்கேறிய கால் சட்டைக்கு மேலே ஒட்டிக் கிடந்த வயிறு. அதற்கு எட்டாமல் இருப்பது போல முட்டிக் கொண்டிருக்கும் கூடான மார்பு.

அவனது கண்கள் கொட்டிய கண்ணீர், முட்டிய மார்பில் வீழ்ந்து, ஒட்டிக்கிடந்த வயிற்றுத் தொப்புளில் வீழ்ந்து மறைந்தது.

'பத்து வருஷமா நான் உங்ககிட்ட வேலை செய்யுறேன். இதுவரையில் எந்தவிதமான குற்றமும் நான் செய்யலே'. ஐயா, 'மோதிரத்தை திருடுற அளவுக்கு, என் நிலைமையில் என்னம்மா மோசம் வந்துடுச்சு?'

உன் மனைவி படுத்த படுக்கையா கிடக்குறான்னு நீ தானே சொன்னே!

என்னைப் போல ஏழைகளுக்கு நோய் வர்ரதும், பசி பட்டினியா சாகறதும், சர்வ சாதாரணம்மா! அதுக்காக, ஏழைங்க எல்லாம் திருடித் தான் பிழைப்பாங்கன்னு நீங்க தீர்மானம்

பண்றது, கேட்க நல்லா இல்லேம்மா!

'அதிகமா ஒன்றும் பேச வேண்டாம். இப்பவே நான் போலீசுக்குப் போன் பண்ணுறேன்! தொலைபேசி இருக்குமிடத்தை நோக்கி வேகமாகப் போனாள் யசோதை!

வாசுதேவனும் வேகமாகப் போனார்.

''யசோதை! இதுக்கு நான் சம்மதிக்க மாட்டேன். பைத்தியம் புடிச்சுடிச்சா உனக்கு! மோதிரம் போனாலும் பரவாயில்லை! போலீசுக்கு போன் பண்ண உன்னை நான் அனுமதிக்க மாட்டேன்.''

காணாம போன மோதிரம், நான் உங்களுக்கு ஆசையா அன்பளிப்பா கொடுத்ததுங்க!

இருக்கலாம். இருந்தாலும், இதற்கு நான் சம்மதிக்க மாட்டேன்.

காரணம்?

போலீஸ்வந்தா, முதல்லே ராமனைத் தான் விசாரிப்பாங்க! பிறகு, ஸ்டேஷனுக்கு அழைச்சிகிட்டுப் போவாங்க. இப்ப சொல்ற மாதிரி தான், எனக்கு எதுவும்தெரியாதுன்னு ராமன் சொல்வான். உன்னைப் போலவே,

போலீசும் நம்ப மாட்டாங்க...அப்புறம் அடிச்சு சித்ரவதை பண்ணி, உண்மையை வரவழைக்க முயற்சி செய்வாங்க!

''ஆயிரம் குற்றவாளிங்க தண்டனை அடையாம போயிடலாம். ஆனா, ஒரு நிரபராதி தண்டனை அடையறதுக்கு நான் காரணமா இருக்க மாட்டேன்.''

''நீங்க நல்லவரா போறீங்க, நான் கெட்டவளா ஆயிட்டேன். எனக்கென்ன? நீங்க எப்படியாவது போங்க!'' யசோதை ஒரு அறைக்குள் போய் புகுந்து கொண்டாள். அங்கிருந்து அவள் விசும்பி அழும் ஓசை கேட்டது.

''ஐயா!'' ராமன் கூப்பிட்டதற்கு வாசுதேவன் திரும்பிப் பார்த்தார்.

நீங்க போலீசுக்குப் போன் பண்ணுங்கய்யா! என் தலைவிதி எப்படி நடக்கணுமோ, அப்படியே நடக்கட்டும்!

''ராமன்! உன்னைப் பத்தி எனக்கு நல்லாவே தெரியும். நேரமாச்சு. கவலைப்படாமே வீட்டுக்குப் போ... சந்தர்ப்பம் தெரியாம யசோதை ஏதோ பேசிட்டா... எதையும் மனசுல வச்சுக்காதேப்பா!''

''சோறு போட்டு காப்பாத்துற அம்மாளுக்கு எது வேணும்னாலும் சொல்றதுக்கு உரிமை இருக்குதுங்க...''

''உன் மனசு எனக்குப் புரியுது. இந்தா நீ கேட்ட இருபது ரூபாய். உன் மனைவிக்கு மருந்து வாங்கிட்டு போ.''

எசமான்... நன்றியுடன் அவர் முகத்தைப் பார்த்தான் ராமன்.

கவலைப்படாதே!

வாசுதேவன் கொடுத்த, பணத்தை வாங்கிக் கொண்டு வாசற்படி தாண்டிய ராமன் காதுகளில், யசோதை குமுறி அழுகின்ற ஓசை கேட்கத்தான் செய்தது.

மோதிரம் திருட்டு, எசமானியின் கோபம், எசமானரின் பாசம், மனைவியின் கஷ்டம், மகனின் எதிர்காலத் திட்டம் என்று எல்லாவற்றையும் போட்டுக் குழப்பிக் கொண்டே பல சந்துகளையும் கடந்து, செக்கு மாடு போவது போல போய்க் கொண்டேயிருந்தான ராமன்.

ராமா என்று யாரோ அழைக்கும் குரல் கேட்டது.

அடகுக் கடையிலிருந்து கணக்கப் பிள்ளை ஓடி வந்தார். ராமன் திரும்பிப் பார்த்து, மனம் பதை பதைக்க என்ன வென்று கேட்டான்.

''உன் மகன் குகனைப் பார்த்தேன் ராமா!''

''கணக்கப்பிள்ளை! என் மகன் இந்த ஊரிலேயே இல்லியே! அவன் பள்ளிக்கூடம் படிக்கிறான்னுதான் உனக்குத் தெரியுமே!''

காலையில பார்த்தேன்.

அப்படியா! எனக்கே தெரியாதுப்பா! நான் வீட்டுக்குத்தான் போறேன். வந்தா நல்லதுதானே! அவனோட அம்மாவுக்கும் காய்ச்சல். பார்த்த மாதிரியும் இருக்கும்.

ராமா! அது ல ஒரு விஷயம் கேளுப்பா! உன் பையன் குகன். நான் இருக்கிற அடகுக் கடைக்கு அவசர அவசரமாக ஓடிவந்தான். கையில ஒரு மோதிரம் இருந்தது!

''என்ன மோதிரமா?''

ஆமாப்பா! அதை ஐம்பது ரூபாய்க்கு அடகு வச்சி வாங்கி வாங்கிட்டு இந்தப் பக்கம் தான் போனான். அதோ வர்ரானே அவன்தான்.

கணக்கப்பிள்ளை எதிர்புறமாக

சுட்டிக்காட்டிய திசையைப் பார்த்தான் ராமன். ஆமாம்! அவன் மகன் குகன், வேகமாக வந்து கொண்டிருந்தான். அவன் கையில் மருந்து பாட்டிலும், மருந்து பொட்டலமும் இருந்தன. வெகு வேகமாக அவன் வந்து கொண்டிருந்தான்.

கணக்கப்பிள்ளை! ரொம்ப நன்றி. நீங்க போங்க...

கணக்கப்பிள்ளை ஒதுங்கிக் கொண்டார்.

மகனைப் பார்த்து ராமன் மலைத்துப் போய் நின்றாலும், குகன் அதிக அன்புடன் ''அப்பா'' என்று அழைத்தான்.

''வாடா பையா! விடுதியில் இருந்து எப்போ வந்தே? என்ன கையில்'' என்று விசாரித்தான் ராமன்.

''உல்லாச பயணம் போகணும்னு பணம் கேட்டாங்க. நான் வாங்கிட்டு வர்ரேன்னு வீட்டுக்கு வந்தேன். வந்தா, அம்மா படுத்த படுக்கையா இருந்தாங்க. என்னை யாருன்னு கூட அடையாளந் தெரியாம திரு திருன்னு விழிச்சாங்க. பயந்துகிட்டு ஓடிப்போய், டாக்டரைக் கூப்பிட்டேன். நல்ல டாக்டர். என் கூடவே வந்து அம்மாவை பரிசோதித்துப்

பார்த்துட்டு, மருந்து எழுதிக் கொடுத்துட்டு போய்ட்டாரு...''

மருந்து வாங்க ஏதுடா பணம்?

எப்படியோ சமாளிச்சுக்கிட்டேன்பா! என் கிட்ட கொஞ்சம் ரூபாய் இருந்தது. சீக்கிரம் வாங்க! அம்மாவுக்கு சீக்கிரம் தரலேன்னா, அம்மாவை பார்க்கவே முடியாதுன்னு டாக்டர் சொல்லியிருக்காரு. வாங்கப்பா... நான் கூப்பிடுறது காதில விழுதா?

குகா...வா அந்தக் கடைவரைக்கும் போயிட்டு உடனே போகலாம்.

ராமன் ஒரு கடைக்குப் போய் அங்கிருந்த தொலை பேசியில் போலீஸ் ஸ்டேஷனுக்குப் போன் செய்து, தன் எசமான் வீட்டில் மோதிரம் காணமல் போனதைக் குறிப்பிட்டு ரிப்போர்ட் செய்தான். பிறகு, மகனை அழைத்துக் கொண்டு தன் எசமான் வீட்டை நோக்கி நடந்தான்.

குகன் எவ்வளவோ திமுறியும் அவன் விடவில்லை.

''எசமான்! திருடனைப் பிடிச்சுட்டேன் எசமான் இதோ இந்தப் பய தாங்க, உங்க

மோதிரத்தைத் திருடினவன்.''

யாரு! இந்தப் பையனா? யார் இவன்?...டேய்! நீ எப்படிடா இந்த மோதிரத்தை எடுத்துகிட்டுப் போனே?

குகன் பேசாமல் மிரள மிரள விழித்துக் கொண்டிருந்தான். அவனுக்கு அம்மா ஞாபகம் தான் வந்து கொண்டேயிருந்தது.

''என்னை விட்டுடுங்க. என் அம்மாவை பார்க்கப் போகணும். அவ செத்துகிட்டிருக்கா!'' அழுது கொண்டே கூறினான்.

''எப்படி எடுத்தேன்னு சொல்லுடான்னு, செத்துப் போற கதையை சொல்றியே!'' ராமன் அதட்டியவாறு அவனை அடிக்கப் போனான்.

அவனை அடிக்காதே! உண்மையை சொல்லுவான் என்று ஆதரவாகப் பேசினார் வாசுதேவன்.

''தம்பி! தைரியமா, அழாமே உண்மையை சொல்லிட்டா நான் உன்னை ஒன்னுமே செய்யலேப்பா... சும்மா சொல்லு.''

''நான் ஊரிலயிருந்து எங்க அம்மாவைப் பார்க்க வந்தேன். அவ செத்துக் கிட்டிருக்குறதா டாக்டர் சொன்னாரு. அதுக்கு மருந்து

வாங்கனும்னா, ஐம்பது ரூபா ஆகும்னு சொன்னாரு. அதைச் சொல்ல நான் இங்கே வந்தேன். இங்க, எங்க அப்பாவைக் காணோம்.

''யார் உங்க அப்பா?...''

''இவருதான். ராமனைச் சுட்டிக் காட்டினான். ராமன் அடிக்க கையை ஓங்கினான். ராமனை அதட்டிவிட்டு 'அப்புறம்பா' என்றார் வாசுதேவன்.

''அப்பாவைக் காணலேன்னதுக்குப் பிறகு, எனக்கு ஒன்னுமே தோணலே. உள்ளே இருப்பாரான்னு பார்க்க வந்தேன். வீட்டுக்குள்ளே யாருமே இல்லை. மேசைமேல மோதிரம் இருந்தது. அம்மா மேல உள்ள ஆசையினால், அதை அப்படியே எடுத்து பாக்கெட்டுல போட்டுக்கிட்டே ஓடிப் போயிட்டேன். இதோ பாருங்க இந்த மருந்தெல்லாம் அந்தப் பணத்துல வாங்குனதுதாங்க.''

''எசமான்! என் மகன் பெரிய திருடனுங்க, போலீசுல பிடிச்சுக் கொடுங்க. ஜெயில்ல போடுங்க... ஐயோ கடவுளே! அவனை நல்லா படிக்கவச்சு பெரிய உத்தியோகத்துக்கு அனுப்பனும்னு நினைச்சேனே! எல்லாம்

தரைமட்டமா போயிடுச்சே!''

முகத்தில் அடித்துக் கொண்டு அழுதான் ராமன்.

''உன் பையன் எப்படியிருப்பான்?'' என்று ஏளனமாகப் பேசிக்கொண்டே வந்தாள் யசோதை.

யசோதை நீ சும்மா இரு. டேய் பையா! எடுத்து கிட்டு போன மோதிரத்தை நீ என்ன செஞ்சே!

''இதோ பில் போக, ஒன்பது ரூபாய் நாற்பது பைசா மீதியிருக்கு.''

''நீ எவ்வளவுக்கு சாப்பிட்டே?''

''நான் ஒன்றுமே சாப்பிடலிங்க.''

''ஏன் உனக்கு பசியில்லையா?''

''நல்ல பசிங்க. நான் நேற்று மத்தியானம் சாப்பிட்டதுங்க. இவ்வளவு நேரம் இன்னும் பச்சைத் தண்ணீ கூட சாப்பிடலே. என் அம்மாவைப் பார்த்த பிறகு, எனக்கு எந்த நினைப்பும் ஓடலே. அவளை காப்பாத்தனும் என்று ஒரே வெறியில தாங்க திருடினேன். இதோ பாருங்க மீதி பணம்!''

குகன் அழுது கொண்டே சொன்னான். ''நான் முதல் முதல்லே இப்பதாங்க திருடினேன். இந்த மருந்தை எங்க அம்மாவுக்கு நீங்களே கொடுத்துடுங்க! நான் ஜெயிலுக்குப் போனாலும் பரவாயில்லிங்க. என் அம்மா பொழைச்சு கிட்டா அதுவே போதுங்க.''

எசமான்! ''நான் போலீஸ் ஸ்டேஷனுக்கு போன் பண்ணி சொல்லிட்டேங்க. இவனை இங்க கட்டிப் போட்டுட்டு, அவங்க வந்த பிறகு ஒப்படைச்சுடுங்க. நான் போய் என்மனைவியை பார்க்கப்போறேன்.'' இவன் என் மகன் இல்லிங்க...திருடன்...திருடன்...திருடன்... ராமன் கத்தினான்.

''ராமா! இங்கே வா! தன் பசிக்காகவோ, தன் ஆசைக்காகவோ இவன் திருடலே. இவன் திருடனாயிருந்தால் கேட்ட உடனேயே இவ்வளவையும் சொல்லியிருக்க மாட்டான்.... இவன் பசிக்காகத் திருடியிருந்தா, இந்நேரம் பத்து ரூபாய்க்கு சாப்பிட்டிருப்பான். ஆசைக்காகத் திருடியிருந்தா, அஞ்சே நிமிடத்துல அத்தனை ரூபாயையும் செலவு பண்ணியிருப்பான்.

ஆனா, இவன் அப்படி செய்யலை! தன்

தாய்மேல உள்ள பாசத்துக்காகத்தான் திருடியிருக்கான்.

ஆமாங்க! "எனக்கு என் அம்மாதான் தெய்வம். அவள் சாகக் கிடக்குறப்போ, நான் எப்படிங்க பார்த்து கிட்டு இருக்க முடியும். என் தப்புக்குத் தண்டனை கொடுங்க சார். ஆனா, இந்த மருந்தை மட்டும் எங்க அம்மாவுக்குத் தயவு செய்து தந்து காப்பாத்திடுங்க சார்!"

கெஞ்சிக் கேட்டுக் கொண்டான் குகன். அன்னையிடம் அவன் கொண்டிருந்த அன்பையும் பாசத்தையும் கண்டு, வாசுதேவன் மனம் நெகிழ்ந்தது. யசோதையைப் பார்த்தார். பெண்மனம் அல்லவா! அவளும் கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள்.

ஈன்றாள் பசி காண்பாள் ஆயினும் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை

"தன்னைப் பெற்ற தாய்க்கு பசியென்று கண்டாலும் அதனைப்போக்க, பெரியோர்கள் வெறுக்கின்ற செயலைச் செய்து, அதன் மூலம் கிடைக்கிற பொருளைக் கொண்டு, தாயின் பசியைப் போக்கக் கூடாதுன்னு, வள்ளுவர் சொல்லியிருக்கிறாரே தெரியுமா தம்பி?"

"ஏதோ அவசர புத்தியில செய்துட்டேங்க.

என்னை மன்னிக்க வேண்டாங்க! சரியான தண்டனை கொடுக்கிறதுதான் தர்மம் ...அப்பா! நீங்கள் போய் அம்மாவைப் பாருங்க. நான் ஜெயிலுக்கு போயிட்டு, உங்க மகனா, நல்ல பையனா திரும்புகிறேன். அப்பா! உங்களுக்கு கெட்ட பேரு வாங்கித் தந்துட்டேன். திருடனோட அப்பான்னு சொல்ற மாதிரி தப்பா நடந்துட்டேன்.

நீங்க என்ன தண்டனை கொடுத்தாலும் ஏத்துக்குறேன் பா!''

''நான் உன்னை மன்னிக்கமாட்டேன் போ!'' ராமன் ஆத்திரத்தோடு கூறினான்.

''நான் மன்னிக்கிறேன்.'' வாசுதேவன் பெருமையாகக் கூறினார்.

பையா! ''நீ உண்மை பேசினியே! அதுவே போதும். இனிமே இதுமாதிரி நடக்காதே! நேர்மையான வழியில் நிறைவேறும் காரியந்தான் நிலைச்சு நிற்கும். குறுக்கு வழியில போய் அடையுற எல்லாமே, குழப்பத்தையும் கெடுதியையும், மனக் கலக்கத்தையும் உண்டாக்கும்.'' புரிகிறதா?

''இனிமே இப்படி நடக்கமாட்டேன். இது

சத்தியம்.''

போ! ஓடிப்போய் இந்த மருந்தை உன் கையாலே கொடு. அப்புறம் வா. ஆர அமர பேசிக்கலாம்.

காலில் விழுந்துவிட்டு, மருந்தை எடுத்துக் கொண்டு மான் குட்டிபோல ஓடினான் குகன்.


எசமான். இப்ப போலீஸ் வருவாங்க.

''எல்லாத்தையும் நான் பார்த்துக்குறேன். தைரியமா போ! உண்மை பேசுற உன் மகன், நன்மை செய்யுறதுக்காக. தெரியாம குற்றம் பண்ணி, குற்றம்னு தெரிஞ்ச பிறகு மன்னிப்பு கேட்டு, மனந்திருந்தின உன் பையன் பிற்காலத்துல பெரிய மனிதனா, புத்திசாலியா வருவான். நல்ல மகனை பெற்றெடுத்த உனக்கு நல்ல எதிர்காலம் இருக்குது!'' என்று தைரியம் கூறி வாழ்த்தினார் வாசுதேவன்.

எசமான்! ''நீங்கள் தெய்வம்ங்க!'' கையெடுத்துக் கும்பிட்டு விட்டுக் கிளம்பினான். யசோதை ராமனிடம் பேசியதற்கு மன்னிப்புக் கேட்பதுபோல வாசுதேவனிடம் திரும்பினாள். வாசுதேவன் மெதுவாக சிரித்தார். யசோதையும் சிரித்தாள்.

இருவரும் சிரித்தவாறு நிற்பதை, கொஞ்ச தூரம் போய் திரும்பிப் பார்த்த ராமன், இருவரும் நன்றாக பல்லாண்டு வாழவேண்டும் என்று தெய்வத்தை வேண்டிக்கொண்டே நடந்தான்.


அவன் மனம் நிம்மதியால் மகிழ்ந்து துள்ளிக் கொண்டிருந்தது. வாலிபன் போல அவன் நடையில் வேகம் இருந்தது. எசமானரின் நல்ல மனத்தை வாழ்த்திக் கொண்டே சென்றான் ராமன்.



# 2. நல்ல தம்பி

தன் தம்பியின் முகத்தைப் பார்த்துக் கொண்டே இருந்தான் தம்புசாமி.

தம்பி சிவசாமியோ, அலட்சியமாக அண்ணனை ஒரு முறை பார்த்துவிட்டு, மறுபுறம் திரும்பிக் கொண்டான். அவனுடைய முகம் கோபத்தால் சிவந்து இருந்தது.



''எனக்குச் சேர வேண்டிய பாகத்தை சொத்துக்களைப் பிரித்துக் கொடு! எந்தவித சமாதானமும் எனக்குத் தேவையில்லை'' என்றான் தம்பி சிவசாமி.

அண்ணனாயிற்றே என்ற மரியாதை கொஞ்சங்கூட அவன் பேசிய பேச்சில் தோன்றவில்லை. யாரோ ஒரு பயங்கர பகைவனிடம் பேசுவதுபோல அவன் முகபாவனை இருந்தது.

தம்புசாமிக்கோ மனக் குழப்பம். தடுமாற்றம். தவறு எப்படி நேர்ந்தது, என்ற ஒரு நினைவோட்டம். தம்பியின் மனம் மாறாதா, திருந்தாதா என்ற ஓர் ஏக்கம்!

சிவசாமியின் சினம் விளையாடும் முகத்தைப் பார்த்தான். ஆங்காரம் அதிகமாகிக் கொண்டிருந்ததே ஒழிய, அமைதி இனி அதில் வராது என்றும் தம்புசாமி தீர்மானமாகக் கருதினான்.

''தம்பி! நாம் இரண்டு பேரும் பெற்றோர் இல்லாதவர்கள். நமது சின்ன வயதிலே பெற்றோரை இழந்தவர்கள் அநாதையாக இதே ஊரிலே தான் நாம் ஆதரவற்று அலைந்தோம்.

வீட்டுக்கு வீடு சென்றுகூலி வேலை செய்து

பிழைத்துக்கொண்டதுடன், உன்னையும் காப்பாற்றினேன். வயலில் வேலை செய்து வயிறு வளர்த்தேன். உன்னையும் வளர்த்தேன்.

அதற்குப் பிறகு உன் அண்ணி வந்தாள், அவளும் நானும் அரும்பாடுபட்டு, அடுத்தவரின் வயலை குத்தகைக்கு வாங்கி உழுது பயிரிட்டு, கொஞ்சங் கொஞ்சமாக நெல்லைச்சேர்த்து, பொருளைச் சேர்த்தோம்.

என்னைப்போல நீயும் வர வேண்டும். வளர வேண்டும் என்று விரும்பி, உன்னை வேலைக்கு அழைத்தேன். வேலை செய்ய உனக்கு மனமில்லை, படிக்கப் பள்ளிக்கு அனுப்பினேன். படிக்கவே உனக்கு விருப்பமிலலை.

இன்று வாலிபனாக வளர்ந்து விட்டாய். குடும்பப் பொறுப்பில்லை. சொன்னால் கோபப்பட்டாய்.

''பழைய கதை வேண்டாம். படிக்கவும் இல்லை. பாடுபடவும் இல்லை. பந்த பாசம் உள்ள சொந்தம் என்று தினம் பேசும் உங்களிடம் கேட்கிறேன். பாகத்தைப் பிரிக்க வேண்டும்! முடியுமா முடியாதா?'' என்று கத்தினான் சிவசாமி.

''நமக்கிருக்கும் 5 ஏக்கர் நிலம் எப்படி வந்தது என்று உனக்குத் தெரியுமா?'' என்று மீண்டும் கேட்டான் தம்புசாமி. அவனது மனைவி தன் சேலைத் தலைப்பால் தனது கண்ணீர் வழியும் கண்களைத் துடைத்துக் கொள்வதைப் பார்த்ததும், தம்புசாமிக்கும் கண்கள் கலங்கின.

''நான் ஊதாரி தான்! உருப்படாதவன் தான். சோம்பேறி தான். நீங்கள் சம்பாதித்ததும் உண்மை தான். அதில் எனக்குப் பாகம் உண்டா? பிரித்துத் தரமுடியுமா முடியாதா?

'' தம்பி சிவசாமி! நான் சொல்வதை தயவு செய்து கேளப்பா! நாம் சாகும் வரையிலும் ஒன்றாகவே, ஒரே குடும்பமாகவே இருக்க வேண்டும் என்று விரும்பினேன். உன் அண்ணியும் அப்படியே விரும்புறாள்!

நீயோ எதையோ நினைத்துக் கொண்டு...''தம்புசாமி முடிக்கவில்லை.

எதையோ நினைக்கவில்லை. எப்படியும் கொடுக்க மன மில்லை. எனக்குரிய பங்கைத் தரமுடியுமா முடியாதா-- பாகம் பிரித்துத் தரமுடியாது என்று சொல்லி விட்டால், நான்

உங்களைக் கேட்கவேயில்லை''

தன் அண்ணன் அதுபோல் சொல்ல மாட்டான் என்று சிவசாமிக்கு நன்றாகவே தெரியும். அதனால்தான் அவ்வளவு தைரியமாகக் கேட்டான்.

தன் தம்பி சேரக் கூடாத ஆட்களோடு சேர்ந்து கொண்டு, செய்யத்தகாத செயல்களையெல்லாம் செய்கிறான் என்று தம்புசாமிக்கும் தெரியும்.

''தோளுக்கும் மிஞ்சினால் தோழன்'' என்பதற் கிணங்க, தன் தம்பியைக் கண்டிக்க முடியாமற் போகவே, தன்னுள்ளேயே வருந்தத் தொடங்கினான்.

இப்போது, தனது சொத்தைப் பாகம் பிரித்துத் தந்தால், நிச்சயம் சொத்தையும் அழித்து விடுவான். உடம்பையும் கெடுத்துக் கொள்வான் என்பதும் அவனுக்குத் தெரியும்.

தினமும் அண்ணனுக்கும் தம்பிக்கும் இதுபோல வாக்குவாதம் நடைபெறும். யாருக்கு ஆதரவாகப் பேசுவது என்ற இரண்டுங் கெட்டான் நிலைமையில், தம்புசாமியின் மனைவி முத்துலட்சுமி, வேதனைப் படுவாள்.

வீட்டிற்குள்ளேயே நடந்து கொண்டிருந்த விவாதம் முற்றி, இப்பொழுது வீதியிலே நடைபெறலாயிற்று.

இலவங்காய் பழுத்து முற்றி வெடித்தால், காற்று அடித்த பக்கமெல்லாம் போவதுபோல, இந்த சேதி ஊரெங்கும் பரவலாயிற்று.

தன்னுடைய கட்சிக்குப் பலம் தேட விரும்பினான் சிவசாமி. தனக்கு சாதகமாகப் பேசுவதற்காக, தன் சகோதரனைப் பற்றியும் அண்ணி முத்துலட்சுமியைப் பற்றியும் இல்லாததும் பொல்லாததுமாகப் பேசினான்.

தாழ்ந்தால் சிரிக்கும் வாழ்ந்தால் வெறுக்கும் இந்த சமூகம், என்பது சிவசாமிக்குத் தெரியாமலே போயிற்று. என்றாலும், நிலைமை அவனுக்குச் சாதகமாகத்தான் மாறியது.

ஊரிலே உள்ள வாழப் பொறுக்காத பலர் ஒன்று சேர்ந்து கொண்டு, சிவசாமியின் சார்பாக பேசத் தொடங்கினர்.

தம்பிக்குரிய பாகத்தை சரிபங்காகப் பகிர்ந்து தந்து விடவேண்டும் என்று திட்டவட்டமாகத் தெரிவித்தனர். தம்புசாமி காலம் தாழ்த்துவதைப்

பழித்தும் இழித்துப் பேசவும் தலைப்பட்டனர்.

தனக்குக் கெட்ட பெயர் வந்ததைப் பற்றிக்கூட கவலைப் படாத தம்புசாமி, இனி தன் தம்பி திருந்தவே மாட்டான் என்று ஒரு முடிவுக்கு வந்தான். சம்மதித்தான். சகல பேர்களையும் அழைத்தான்.

நிலங்கள் இரண்டு பாகமாகப் பிரிக்கப்பட்டன. வீட்டுச் சொத்துக்களும், பண்ட பாத்திரங்களும் சரி சமமாகப் பகிர்ந்து கொள்ளப்பட்டன.

ஆளுக்கொரு வீடு என்று தனித்தனியே வாழவேண்டும் என்றும், இனி யாரும் யாருடனும் எந்தவித உறவும் கொண்டாடக் கூடாது என்றும், பேச்சு வார்த்தை கூட வைத்துக் கொள்ளக் கூடாது என்றும் அந்த ஊரார் பேசி, உடன் பிறந்த சகோதரர்களைப் பிரித்து வைத்து விட்டனர்.

மிகவும் ஏழையாக இருந்து கடும் உழைப்பால் முன்னுக்கு வந்தவனல்லவா தம்புசாமி! அவன் தலையெடுத்து தங்களுக்கு மேல் வசதியாக வாழ்வதை, சோம்பேறியாக இருந்து சோற்றுக்குக் கஷ்டப்படும் மற்றவர்கள் பொறுப்பார்களா?...

வீட்டைப் பிரித்தார்கள். பணத்தைப் பிரித்தார்கள். ஆனால் அந்த இரண்டு வீட்டுக்கும் மத்தியில் இருந்த மாமரத்தை என்ன செய்வது?

நிலமும் சொத்தும் தன் கைக்கு வந்த மகிழ்ச்சியில் அந்த மரம் தனக்கு வேண்டாமென்று சிவசாமியே கூறி விட்டான்.

எங்கே அந்த மரத்தை வெட்டிவிட வேண்டும் என்று கேட்கப் போகிறானோ என்று பயந்து கொண்டு, எல்லாத் தெய்வங்களையும் வேண்டிக் கொண்டிருந்த முத்துலட்சுமி, இதைக் கேடடதும் நிம்மதியாக ஆனந்தப் பெருமூச்சு விட்டாள்.

தனித்தனியாக சகோதரர்கள் வாழத் தொடங்கினார்கள். நாட்கள் போய்க் கொண்டேயிருந்தன!

தம்புசாமியும் முத்துலட்சுமியும் மனதுக்குள் வேதனைப்பட்டுக் கொண்டிருந்தாலும், வழக்கம் போல, வயலில் கடும் உழைப்பில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். சிவசாமியும் வழக்கம் போல, தன் சில்லறைத் தனமான செயல்களில் ஈடுபட்டுக் கொண்டிருந்தான்.

சிவசாமியின் கையிலிருந்த பணமும்

வசதியும் ஏரியிலிருந்த தண்ணீர் வாய்க்காலில் வெளியேறிக் கொண்டிருப்பது போல் செலவாகிப் போய்க் கொண்டிருந்தது. தம்புசாமிக்கோ, ஏரிக்குத் தண்ணீர் வந்து சேர்வது போல, உழைப்பினால் பணம் நிரம்பிக் கொண்டிருந்தது.

அதனால், மேலும் இரண்டு ஏக்கர் நிலம் வாங்கினான் தம்புசாமி. சிவசாமிக்கோ இந்த சேதியைக் கேட்டதும் மனம்பொறுக்கவில்லை.

தன்னை ஏமாற்றி, பதுக்கி வைத்திருந்த பணத்தைக் கொண்டு தான், புதிதாக நிலம் வாங்கினான் என்று புதுப்பிரச்சினையைக் கிளப்பி தமையனை வீண் வம்புக்கு இழுத்தான்.

சிவசாமியிடம் சில்லறையும் பல சௌகரியங்களும் தினம்தோறும் பெற்றுக் கொண்டவர்கள், சிவசாமி சொன்னது உண்மைதான் என்று ஊரெங்கும் சொல்லிக் கொண்டு திரிந்தார்கள். அதிலும் பங்கு வேண்டும் என்று கேட்கும் படியும் சிவசாமியைத் தூண்டினார்கள்.

சிவசாமியும் கண்ட கண்ட இடத்தில் நின்று தன்னை தாய் தந்தை போலிருந்து வளர்த்து ஆளாக்கி, அண்ணனையும் அண்ணியையும்

வாய்க்கு வந்தபடி தாறுமாறாகத் திட்டிக் கொண்டிருந்தான்.

'தெய்வமே துணை' என்று தெய்வத்தின் மேல் பாரத்தைப் போட்டுவிட்டு, சிவசாமி என்றாவது ஒரு நாள் திருந்தி, திரும்ப வருவான் என்ற நம்பிக்கையுடன் தங்கள் கடமையைச் செய்து வந்தனர்.

ஒருநாள் காலையில், தூங்கி எழுந்து வந்த சிவசாமி கடன்காரன் ஒருவன் தன் வீட்டு வாசலில் நின்று கொண்டிருப்பதைக் கண்டான்.

பல நாள் அவனை ஏமாற்றித் தப்பித்துக் கொண்ட சிவசாமி, இன்று வசமாக சிக்கிக் கொண்டான். உடனே வட்டிப் பணமும் தொகையும் தராவிடில் வக்கீல் நோட்டீஸ் கொடுத்து, அவனது சொத்தை ஏலம் விட ஏற்பாடு செய்து விடுவதாகக் கத்த ஆரம்பித்தான்.

ஏற்கனவே சிவசாமி தன் வீட்டில் உள்ள பண்ட பாத்திரங்களைக் கூட அடகுக் கடையில் வைத்திருந்தான். அதுவும் பற்றாமல் போகவே, வட்டிக்கும் பணம் வாங்கி யிருந்தான். அந்த வட்டிக்காரன் தான் இவன். முரட்டுப் பேர்வழி.

கடன்காரன் தன் வீடேறி வந்து இப்படி பேசியது, சிவசாமிக்கு மிகவும் அவமானமாக இருந்தது.

'இன்று சாயங்காலம் வா! வட்டியை உன் முகத்தில் வீசி எறிகிறேன் என்று வீறாப்புப் பேசினான் சிவசாமி, வட்டி கேட்டவனும் வருகிறேன் மாலையில் என்று போய்விட்டான்.

சிவசாமிக்கு ஒன்றுமே புரியவில்லை.

எப்படி பணம் சேர்ப்பது? யாரிடம் கேட்பது?

கதவை அடைத்துக் கொண்டு, படுக்கையில் படுத்தபடியே அன்று முழுவதும் யோசனை செய்தான். ஆனால் உருப்படியான ஒரு யோசனை கூட அவனுக்கு உதயமாக வில்லை.

அண்ணனிடம் போய் கடன் கேட்டால் என்ன? அவன் மனதில் ஓர் அற்ப ஆசை உண்டாயிற்று! அதை விட நாக்கைப் பிடுங்கிக் கொண்டு சாகலாம் என்று அவனது அகங்கார மனம் பதில் கூறிற்று.

ஒரு ஏக்கர் நிலத்தை விற்று விட்டால் என்ன? என்றால் அதுவும் உடனே நடக்கக்

கூடிய காரியமா?

உடனே பணம் தேவையாயிற்றே! என்ன செய்யலாம் எப்படியும் ஒரு வழி கண்டு பிடித்தாக வேண்டுமே!

தன் வீட்டுக் கூரையிலே பொத்தென்று ஏதோ விழுவது போல் சத்தம் கேட்டது. எவனாவது கல் எறிந்தானா?

எழுந்து வந்து வெளியே பார்த்தான் சிவசாமி!

அணில் கடித்த மாங்காய் ஒன்று அவன் வாசலில் விழுந்து உருண்டோடிக் கிடந்தது.

அண்ணாந்து பார்த்தான். பல நாட்களுக்குப் பிறகு இப்பொழுது தான் மாமரத்தைப் பார்த்தான் சிவசாமி.

மாமரத்தில் மாங்காய்கள் கொத்துக் கொத்தாக காய்த்துத் தொங்கிக் கொண்டிருந்தன. அவற்றைப் பார்த்ததும், சிவசாமிக்குத் திடீரென ஒரு யோசனை உதித்தது.

அந்த மாமரம் இருவருக்கும் பொதுவானது தானே!

'இந்த காய்களைப் பறித்தால் இன்றைய

பிரச்சினை தீர்ந்து போய் விடும்' என்று எண்ணினான்.

ஓரளவு பணம் கிடைத்தால் கூட இன்று சமாளித்துக் கொள்ளலாம் என்று எண்ணிக் கொண்டே, காரியத்தில் இறங்கினான்.

வேலைக்கார ஆட்களை ஊருக்குள் சென்று அழைத்துக் கொண்டு வந்தான்.

''காய்களை எல்லாம் பறித்துப் போட்டு சாக்கிலே கட்டுங்கள்'' என்று சத்தம் போட்டு அவர்களை வேலைக்கு ஏவினான்.

ஆட்களின் நடமாட்டத்தின் சத்தம் கேட்டு, அடுப்படியிலிருந்து வெளியே வந்தாள் முத்துலட்சுமி. வேலைக்காரர்கள் மரத்தின் மீது ஏறுவதற்குத் தயங்கியவாறு தயாராயிருந்தார்கள்.

சிவசாமி அவர்களுக்குத் தைரியம் ஊட்டிக் கொண்டிருந்தான்.

தம்புசாமி அந்த நேரத்தில் வயலுக்குப் போயிருந்தான். வருகிற நேரம்.

சிவசாமி சத்தம் போட்டு, தன்னையும் தன் கணவனையும் மிக இழிவான மொழிகளில் பேசி, வேலைக்காரர்களிடம் மரத்தில் ஏறச்

தூண்டியதைக் கேட்ட முத்துலட்சுமி, அருகில் சிவசாமியிடம் வந்து...

'கொஞ்சம் அமைதியாயிரு தம்பி! அண்ணன் வந்ததும் பேசிக் கொண்டு மற்றவைகளைக் கவனிக்கலாம்' என்றாள்..

'அண்ணனாவது ஆட்டுக்குட்டியாவது! எனக்குச் சேரவேண்டிய காய்களை நான் பறித்துக் கொள்கிறேன். யாரையும் நான் கேட்க வேண்டியதில்லை. யாருக்கும் நான் பயப்படவுமில்லை. முடிந்தால் உன்னால் ஆனதைப் பார்த்துக் கொள்!' முரட்டுத்தனமாக சிவசாமி கத்தினான்.

'உனக்கு உரிமையிருக்கிறது தம்பி; இல்லையென்று சொல்லவில்லை.'

''தேன் கூடு இருக்கிறது. தேனீக்கள் நாளைக்குள் போய் விடும். நாளைக்கு நானே பறித்துத் தருகிறேன். எடுத்துக் கொள்'' என்றாள் அண்ணி.

இரவோடு இரவாக காய்களைப் பறித்துக் கொள்ள சதித்திட்டமா போடுகிறாய்! உன்னால் தானே இவ்வளவு வம்பும் என்று அண்ணியை அடிக்க கையை ஓங்கிவிட்டு, வேலைக்

காரர்களை ஏவினான்.

முத்துலட்சுமி மரத்தின் அடிக்குச் சென்று, இன்று நான் மரத்தில் ஏற யாரையும் அனுமதிக்கமாட்டேன் என்று நின்றான்.

கோபமடைந்த சிவசாமி, ஓடிவந்து தன் அண்ணியை ஓங்கி அறைந்து விட்டான். அடிபட்ட லட்சுமி கீழே விழப் போகும் பொழுது, வயலில் இருந்து வந்த தம்புசாமி தன் மனைவியைத் தாங்கிப் பிடித்துக் கொண்டான்.

சிவசாமிக்கு இன்னும் கோபம் தணியவில்லை. அண்ணன் தன்னைத் தாக்க வருவான் என்று நினைத்துக் கொண்டு தயாராக நின்றான்.

''அண்ணன் தம்பிக்குள் ஆயிரம் இருக்கும். இவள் யார் வந்து குறுக்கே பேச? இனி யாராகிலும் வந்தால், கொலையே விழும்'' என்று குதித்துக் குதித்துப் பேசினான்.

மற்றவர்கள் முன்னால் இப்படி மானபங்கப் படுத்தியது போல அடித்ததை நினைத்து, முத்துலட்சுமி குமுறிக் குமுறி அழுதாள்.

தம்பியின் தடித்தனத்தைப் பார்த்த தம்புசாமிக்கு கோபம் தாளவில்லை. அவன்

அருகில் சென்று, 'சிவசாமி இங்கே வா' என்று கோபத்திலும் மிக அமைதியாகக் கூப்பிட்டான்.

அண்ணன் பசுத் தோல் போர்த்திய புலி போல தன்னைத் தாக்கத்தான் கூப்பிடுகிறான் என்று நினைத்துக் கொண்டு, உடனே தாவி தம்புசாமியின் முகத்திலே ஓங்கிக் குத்தினான்.

தம்புசாமியின் கடைவாயில் இரத்தம் கசிந்தது. கொப்புளித்த வண்ணம் இருந்தது. அப்படியே மல்லாந்து தரையில் விழுந்தான். தலையின் பின்புறம் நல்ல அடிபட்டிருந்தது.

அவனால் எழுந்திருக்க முடியவில்லை.

இந்தக் கொடிய நிகழ்ச்சியைப் பார்த்த வேலைக்காரர்கள், அப்படியே சிலை போல நின்றுவிட்டனர்.

பயந்தாங்கொள்ளிகளே! ஓடுங்கள்! "மாங்காய்களை நானே பறிக்கிறேன் பார்" என்று விடுவிடென மரத்தின் மீது ஏறினான்.

யாராவது என்னைத் தடுத்தால், இந்தத் தடியாலே மண்டையை உடைக்கிறேன் பார்! அப்பொழுதுதான் எல்லாருக்கும் புத்திவரும் என்று கூறிக்கொண்டே ஒரு நீண்ட தடியுடன் மரத்தில் ஏறினான்.

தேன் கூட்டிற்கு மேலேதான் மாங்காய்கள் கொத்துக் கொத்தாகக் காய்த்துத் தொங்கிக் கொண்டிருந்தன. அந்தக் காய்களைப் பார்த்துக் குறிவைத்துக் சுழற்றி, சுழற்றி தடியால் அடித்தான்.

பல மாங்காய்கள் அடிபட்டுக் கீழே விழுந்தன. அதிலே ஒரு காய் தேன் கூட்டின் மேலே போய் விழுந்து, பிறகு தரையில் விழுந்தது.

தேன்கூட்டிலிருந்து ஒரு தேனீ சர்ரென்று மேலே பறந்தது. அது அவனைச் சுற்றிச் சுற்றிப் பறந்து வந்தது. அது தன்னைக் கொத்துமோ இல்லையோ என்று சிவசாமி நினைப்பதற்குள்ளேயே, அது அவனது உதட்டில் கொட்டிவிட்டுப் பறந்தது.

விறுவிறென்று விஷம் ஏறுவதுபோல, உதடு வலிக்கத் தொடங்கியது.

சிவசாமிக்குக் கோபம் தாங்க முடியவில்லை.

என்னையா நீ கொட்டினாய்? உன்னை என்ன செய்கிறேன் பார்' என்றவாறு தேன் கூட்டைக் கைத் தடியால் ஓங்கி அடித்தான்.

அடித்ததுதான் தாமதம்! ஆயிரக்கணக்கான

தேனீக்கள் ஆங்காரத்துடன் பாய்ந்து வந்தன. தங்கள் கூட்டைத் தாக்கிய தறுதலையைச் சுற்றி வளைத்து முற்றுகையிட்டதுபோல தாக்கின.

தேகம் முழுவதையும் தேனீக்கள் கொட்டித் துளைத்தன.

வலி பொறுக்க முடியவில்லை, மரத்திலிருந்து கீழே இறங்கவும் வழி தெரியவில்லை. அங்கிருந்து அவன் தடுமாறிக் கீழே விழுந்தான்.

'ஐயோ அண்ணா!' என்று அவனை அறியாமலே கத்தி விட்டான்.

எழுந்திருக்க முடியாமல் கிடந்த தம்புசாமியின் காதில், தன் தம்பி மரண ஓலமாகக் கூப்பிட்ட குரல் வந்து மோதியது.

இவ்வளவு நேரம் மயக்கநிலையில் கிடந்த தம்புசாமி, தட்டுத்தடுமாறி எழுந்து தன் தம்பியை நோக்கி ஓடினான்.

பலாப் பழத்தில் ஈ மொய்ப்பது போல சிவசாமியை தேனீக்கள் சிவசாமியின் உடலை மொய்த்துக் கொண்டிருந்தன.

தம்பி என்று தம்புசாமித் தாவி தன் தம்பியின் மேல் விழுந்து, அவனுடைய உடலை

போர்த்திக் கொண்டான்.

தேனீக்கள் இப்பொழுது தம்புசாமியைத் தாக்க ஆரம்பித்தன. தன்னைத் தேனீக்கள் தாக்கினாலும், தம்பியைக் காப்பாற்றிவிட்டோம் என்ற திருப்தியில், வேதனையை மௌனமாகத் தாங்கிக் கொண்டிருந்தான் தம்புசாமி.

இதனைப் பார்த்த முத்துலட்சுமி வீட்டிற்குள் ஓடினாள். சாக்கு ஒன்றினால் தன்னை முழுதுமாக மறைத்துக் கொண்டு, தீப்பந்தம் ஒன்றையும் எடுத்து வந்து, தேனீக்களை சாடத் தொடங்கினாள்.

தன் குடும்பத்தையே காக்க வேண்டும் என்ற வெறியுடன் முத்துலட்சுமி போராடினாள். வெற்றியும் பெற்றாள்.

வெறி பிடித்த தேனீக்களிடமிருந்து சகோதரர் இருவருக்கும் விடுதலை கிடைத்தது.

தம்பி சிவசாமி தேம்பித் தேம்பி அழுது கொண்டிருந்தான்.

உனக்கு ஒன்றும் வலியில்லையே என்று தம்புசாமி தன் தம்பியின் தேகம் முழுவதையும் தடவிக் கொடுத்தவாறு இருந்தான்.

அண்ணா! அறிவில்லாத என்னை மன்னித்து விடுங்கள். இந்தப் பாவி மீதா

இத்தனை பாசம் என்று அழுதான்.

தன்மேல் தவறி விழுந்த மாங்காயின் மோதலைத் தாங்காத அற்ப அறிவுள்ள தேனி, என்னைத் தாக்கியது. நான் உங்களை வேண்டுமென்றே வெறித்தனமாகத் தாக்கிய பொழுதுங்கூட, என்னைக் கருணையுடன் காப்பதற்காக தேனீக்களிடமிருந்து கடிபட்டு என்னை காத்த நீங்கள்தான் இனி என்னைக் காக்க வேண்டும் என்று தன் முன்னால் நின்ற அண்ணியின் திருவடிகளைக் கட்டிப் பிடித்து, தன் கண்ணீரால் கழுவினான் சிவசாமி.

மனிதர்களால் சமரசப்படுத்தி சாதிக்க முடியாத விரோதத்தை, தேனீக்கள் சாதித்துத் தந்ததற்காக இறைவன் வடிவிலே வந்த தேன் கூட்டை முத்துலட்சுமி வணங்கிக் கொண்டிருந்தாள்.

சகோதரர் இருவரும் தங்களை மறந்து ஒருவரை ஒருவர் தழுவியவாறு எழுந்து வந்தனர்.

மூவரின் முகத்திலும் பூரண திருப்தி நிறைந்த அன்பு, புன்னகை மூலமாக பரவி இருந்தது.

அன்று முதல் சிவசாமி நல்ல தம்பி யாகிவிட்டான்.

# 3. நல்ல மாணவன்

தலைமை ஆசிரியர் கோபமாக வகுப்பிற்குள் நுழைந்தார். மாணவர்கள் பயந்து கொண்டு எழுந்து நின்றனர். மேஜைக்கு முன்னே வந்து நின்று கொண்ட தலைமை ஆசிரியர், எல்லோரையும் ஒரு முறை ஏற இறங்கப் பார்த்தார். ஒரு போலீஸ் அதிகாரி, திருடன் யார் என்று கண்டு பிடிக்க முயல்வதைப் போல, இருந்தது அவரது பார்வை.



எல்லோரும் அப்படி அப்படியே உட்கார்ந்திருக்க வேண்டும். யாரும் எழுந்திருக்கக் கூடாது. எங்கேயும் போகக் கூடாது என்று கட்டளையிட்டார். என்ன ஏது என்று ஒன்றும் புரியாமல்,மாணவர்கள் ஒருவரை ஒருவர் ஆச்சரியத்துடன் பார்த்துக் கொண்டனர்.

''நான் ஒவ்வொருவர் புத்தகப் பையையும் சோதனை போடப் போகிறேன். ஏன் தெரியுமா?'' கொஞ்ச நேரம் நிறுத்தினார். மாணவர்களுக்கு இன்னும் ஆச்சரியமாக இருந்தது.

உங்கள் வகுப்புக்கு ஆசிரியர் வரவில்லை என்பதால், அடுத்த வகுப்பில் போய் அமர்ந்து, பாடம் படிக்கச் சொன்னேன். ஆனால், அந்த வகுப்பில் உள்ள ஒரு பையனின் ஆங்கில இலக்கணப் புத்தகம் காணமல் போய் விட்டது. அந்த வகுப்பில் தேடினேன். யாரிடமும் இல்லை. உங்கள் வகுப்பில் யாரோ ஒரு பையனிடம் தான் இருக்கிறது. நிச்சயம் இங்கேதான் இருக்கிறது! யாராவது தெரியாமல் எடுத்து வைத்திருந்தால், கொடுத்து விடுங்கள்.

தெரியாமல் செய்தால் அது சிறு தவறு தான்.

அதை நான் மனப்பூர்வமாக மன்னித்து விடுவேன் என்றார் தலைமை ஆசிரியர்.

யாரும் ஒன்றும் பேசவில்லை. இடத்தை விட்டு எழுந்திருக்கவும் இல்லை. யார் திருடியிருக்கலாம் என்ற எண்ணத்தில், ஒருவரை ஒருவர் சந்தேகத்துடன் பார்த்துக் கொண்டனர். வகுப்பறை ஒரே அமைதியாக இருந்தது. அந்த வகுப்பறை இதுபோல் என்றுமே அமைதியாக இருந்ததே இல்லை.

ஒவ்வொருவர் முகத்தையும் தலைமை ஆசிரியர் பார்த்துக் கொண்டே வந்தார். அவரது பார்வையை அவர்களால் சந்திக்க முடியாமல், தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டு, எதையோ தேடுவது போன்ற பாவனையில் உட்கார்ந்திருந்தார்கள்.

இனிமேல் கேட்பதில் பிரயோசனமில்லை என்று காரியத்தில் இறங்கினார் தலைமை ஆசிரியர். ஒவ்வொருவர் பையையும் சோதனை போட்டார். புத்தகங்களை புரட்டிப் பார்த்தார் யாரிடமும் அந்தப் புத்தகம் இல்லை.

அந்தப் புத்தகம் சிவப்பு அட்டை போட்டிருக்கும். **ரென் அன் மார்ட்டின்** என்பவர்களால் எழுதப்பட்டது.

இவ்வாறு காணாமற் போன புத்தகம் பற்றி விளக்கம் கூறிக்கொண்டே சோதனை செய்தார்.

வகுப்பில் பாதிக்கு மேல் சோதனை செய்தாயிற்று. யாரிடமும் அந்தப் புத்தகம் இல்லை. தலைமை ஆசிரியருக்குக் களைப்பு அதிகமாயிற்று. 'நம்மிடம் இப்படி வேலை வாங்குகிறார்களே இந்த மாணவர்கள்' என்று இன்னும் கோபம் அதிகமாகிக் கொண்டே இருந்தது. அவர் கோபத்துடன் வசர அவசரமாக சோதனையை தொடர்ந்து ந திக் கொண்டே இருந்தார்.

முத்து என்பவன் அருகில். முத்து! உன் புத்தகப் பையை எடுத்து வெளியே வை என்றார். அவனும் எடுத்து வைத்தான். புத்தகங்கள் எல்லாவற்றையும் பார்த்தார். அந்தப் புத்தகம் அதில் இல்லை. ஆனாலும், முத்து பயந்தவன்போல் விழித்துக்க கொண்டு நின்றான். அவனது பார்வையைப் பார்த்ததும் புரிந்து கொண்ட தலைமை ஆசிரியர், நீதானே எடுத்தாய்! என்று அதட்டினார்.

நான் எடுக்கவே இல்லை சார்! என்று வாய் குழறிய படி பதில் சொன்னான் முத்து.

அந்த மாணவர்களுக்குத் தரப்பட்டிருந்தது

சாய்வு மேஜை (Desk) ஆகும். அதற்குள்ளே புத்தகங்கள் வைத்துக்கொள்ள அறை உண்டு. முத்து பயந்தபடி, தலைமை ஆசிரியர் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தான். தலைமை ஆசிரியருக்கு அவன்மேல் இப்பொழுது முழுமையாக சந்தேகம் வந்துவிட்டது.

'உன் சாய்வு மேஜையில் என்ன இருக்கிறது? என்று நான் பார்க்கிறேன் என்று தலைமை ஆசிரியர் கையை விட்டார். முத்துவுக்கு உயிரே போனது போல் ஆகிவிட்டது.

தலைமை ஆசிரியருக்கோ, திருட்டைக் கண்டுபிடித்து விட்டது போல உணர்ந்தார். அங்கே ஒரு புத்தகம் கனமான அட்டையுடன் இருந்தது. எடுத்துப் பார்த்தால் சிவப்பு அட்டை.

அவருக்கு ஒரே கோபம். திருட்டு வேலையா செய்கிறாய்! தடிப்பயலே என்று முத்துவை அருகிலே இழுத்து கன்னத்தில் பளார் என்று அறைந்தார்.

'இல்லை சார்' என்று முத்து தடுமாறினான்.

'நீ பதில் எதுவும் பேசவேண்டாம். உன்னைப் பள்ளியை விட்டே வெளியே

அனுப்பப் போகிறேன். அப்பொழுதுதான் திருட நினைப்பவர்களும் பயப்படுவார்கள்' என்று முத்துவை அழைத்தார்.

சார்... இது ஆங்கில இலக்கணப் புத்தகம் அல்ல... என்று முத்து உளறியபடி கூறினான்.

பின்னே! திருடியதும் அல்லாமல் பொய் வேறு பேசுகிறாயா? என்று பாய்ந்தார் தலைமை ஆசிரியர்.

இது...இது...வந்து நாவல் புத்தகம் சார்! என்றான் முத்து.

நாவலா...!

ஆமாம் சார்! இதன் பெயர் இளிச்சவாயன்! ரஷ்ய நாவல் சார் என்றான் முத்து.

இளிச்சவாயனா! தலைமை ஆசிரியர் ஏளனமாகக் கேட்டார். மாணவர்கள் இதைக் கேட்டதும், இது தான் சந்தர்ப்பம் என்று கொல்லென்று சிரித்து விட்டார்கள்.

முத்துவுக்குக் கொஞ்சம் தைரியம் வந்தது. தலைமை ஆசிரியருக்கும் கொஞ்சங் கொஞ்சமாக கோபம் குறையத் தொடங்கியது. புத்தகத்தை அப்பொழுது தான் பிரித்துப் பார்த்தார் தலைமை ஆசிரியர் 'இளிச்...

என்று கொட்டை எழுத்தில் இருந்தது.

நாவல் புத்தகமா இது! வகுப்பறைக்குள் பாடம் படிப்பதை விட்டு விட்டு, கதைப் புத்தகமா படிக்கிறாய்! அதனால் தான் நீ மதிப்பெண்கள் குறைவாக வாங்குகிறாய் என்று அவன் காதைப் பிடித்துத் திருகினார்.

முன்னே கோபமாக அடித்த வேகம், இப்பொழுது இல்லை. வேறு ஒரு காரணத்திற்காக அவனை அடித்தது மில்லாமல், அறிவுரை வேறு கூறத் தொடங்கினார். இனி மேல் பள்ளிக் கூடத்திற்குப் பாடப் புத்தகங்களைத் தவிர வேறு புத்தகங்களைக் கொண்டு வரவே கூடாது என்று எல்லோரையும் எச்சரித்தார்.

''இது நான் படிப்பதற்காகக் கொண்டு வரவில்லை சார். என் தந்தை நூல் நிலையத்தில் வாங்கி வந்த புத்தகம். இன்று அபராதம் இல்லாமல் திருப்பித்தரும் நாள். அவரால் கொண்டு போய் தரமுடியவில்லை என்பதால் என்னிடம் கொடுத்து அனுப்பினார். காலையில் நூல் நிலையத்திற்கு போக நேரம் இல்லை அதனால் மாலையில் போய் தரலாம் என்றிருந்தேன்'' என்றான் முக்கு

ஒரு மாதிரியாக எல்லாப் பைகளையும் சோதனை போட்டு முடித்தார் தலைமை ஆசிரியர். ஆனால், புத்தகம் கிடைக்க வில்லை. தவறாக நினைத்து, முத்துவை அறைந்து விட்டோமே என்று மனவருத்தப்பட்டார்.

மாணவர்களே! நாம் பள்ளிக் கூடத்திற்கு நல்லவைகளைக் கற்கத் தான் வருகிறோம். இதை நாம் மறந்து விடவே கூடாது. புதிய விஷயங்களைப் படிக்க வரும் போது, நாம் பொறுப்புள்ளவர்களாகவும் இருக்க வேண்டும். ஒரு பையன் கவனம் இல்லாமல் புத்தகத்தைக் காணாமல் போட்டு விட்டதால், எத்தனை மாணவர்களை சந்தேகப்பட நேர்ந்தது. எத்தனை மாணவர்களை கஷ்டப்பட வைத்து விட்டோம் பார்த்தீர்களா! இனிமேல் நீங்கள் உங்கள் பொருள்கள் மேலே கவனமாக இருக்க வேண்டும் என்று தலைமை ஆசிரியர், தமது மாணவர்களுக்கு அறிவுரை கூறினார்.

அப்பொழுது மாணவர்கள் 'வணக்கம் ஐயா' என்று ஒரே குரலில் கூறி எழுந்து நின்றார்கள். தலைமை ஆசிரியர் திரும்பிப் பார்த்தார். ஆங்கில ஆசிரியர் வாசலில் நின்று கொண்டிருந்தார்.

மன்னிக்கவும்! வகுப்புக்கு வருவதற்கு சிறிது தாமதம் ஆகிவிட்டது என்று அவர் தலைமை ஆசிரியரிடம் வருத்தம்தெரிவித்தார்.

'இது உங்கள் வகுப்பா' என்று கேட்டுக் கொண்டே -லைமை ஆசிரியர். ஆசிரியரைப் பார்த்தார். அப்பொழுது தலைமை ஆசிரியருக்கு ஓர் ஆச்சரியம் காத்துக் கொண்டிருந்தது. அவரது கண்கள் ஆச்சரியத்தால் பெரிதாக விரிந்து கொண்டன.

இத்தனை நேரமும் எந்தப் புத்தகத்திற்காக, எல்லா மாணவர்களுடைய புத்தகப் பைகளையும் சோதனைப் போட்டுத் தேடிக் கொண்டிருந்தாரோ, அந்த சிவப்பு அட்டைப் புத்தகம், ஆங்கிலம் ஆசிரியரின் கையில் இருந்தது.

உங்கள் கையில் என்ன புத்தகம்?

இதுவா! ரென் அன் மார்ட்டின்! என்றார் ஆசிரியர்.

உங்கள் புத்தகமா இது! தாருங்கள் பார்க்கலாம்!

இது அடுத்த வகுப்பில் சுந்தரம் என்ற மாணவன் இருக்கிறானே, அவனுடைய புத்தகம்

என்றார் ஆசிரியர்.

இந்த புத்தகம் உங்களிடம் எப்படி வந்தது?

காலையில் முதல் மணி அடித்ததும், அவன் வந்து என்னிடம் தந்துவிட்டுப் போனான். அவனிடம் நான் நேற்றே கேட்டிருந்தேன்.

மாணவர்களுக்கு ஒரே ஆச்சரியமாக இருந்தது. புத்தகத்தை ஆசிரியரிடம் கொண்டு போய் கொடுத்து விட்டு, நம்மையெல்லாம் இந்த சுந்தரம் மாட்டி விட்டானே என்று மாணவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்து சைகையால் பேசிக் கொண்டானர்.

எங்கே அந்த சுந்தரம்? போய் அவனை அழைத்து வாருங்கள்! ஒரு பையன் வேகமாக அடுத்த வகுப்பை நோக்கி ஓடினான்.

'சுந்தரத்தின் ஞாபகமறதியால், எவ்வளவு துன்பம் பாருங்கள், வந்ததும் என் அறைக்கு அனுப்பி வையுங்கள் என்று தலைமை ஆசிரியர் புறப்பட்டார்.

சுந்தரத்தை அழைத்துக்கொண்டு அந்தப் பையன் வந்தான்.

சுந்தரம்! இந்தா உன் புத்தகம். என்னிடம் தந்து விட்டு, திருட்டு போய்விட்டது என்றா

தலைமை ஆசிரியரிடம் புகார் செய்தாய்! இதை எடுத்துக் கொண்டு, தலைமை ஆசிரியரை போய்ப் பார் என்று ஆங்கில ஆசிரியர் புத்தகத்தைக் கொடுத்தார்.

இதோ இந்தப் புத்தகத்தையும் வாங்கிக்கொண்டு போ என்று முத்து, சிவப்பு அட்டைப் புத்தகத்தைக் காட்டினான். எல்லா மாணவர்களும் இளிச்சவாயன் என்று கத்தினார்கள். சுந்தரம் அவமானத்தால் தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டான்.

''என் ஞாபக மறதியால் உங்களுக் கெல்லாம் தொந்தரவு தந்துவிட்டேன். மன்னித்துக் கொள்ளுங்கள். இனிமேல் இப்படி இருக்கமாட்டேன்'' என்று சுந்தரம் நாத்தழு தழுக்க கூறினான். சிரித்த மாணவர்கள் இப்பொழுது அமைதியாக இருந்தார்கள்.

தலைமை ஆசிரியர் அடிக்கப் போகிறார் என்ற பயத்துடன் சுந்தரம் மெதுவாக நடந்து கொண்டிருந்தான். இவன் நன்றாக அடிவாங்கப் போகிறான் என்று மாணவர்கள் கற்பனை செய்து கொண்டிருந்தார்கள். தலைமை ஆசிரியரோ ஒரு பெரிய பிரச்சினை தீர்ந்தது

என்ற மகிழ்ச்சியுடன் தன் வேலைகளைக் கவனித்துக் கொண்டிருந்தார்.

''இனிமேல் நான் எதையும் மறக்கமாட்டேன். நன்றாக நினைவில் வைத்துக் கொள்வேன் சார்'' என்று கூறியபடியே, சுந்தரம் தலைமை ஆசிரியர் அறையை விட்டு வெளியே வந்தான்.

அவன் முத்துவிடம் மன்னிப்புக் கேட்பதற்காக போய்க் கொண்டிருந்தான். முத்துவோ இனிமேல் கதைப் புத்தகத்தை பள்ளிக் கூடத்திற்குக் கொண்டு வருவதில்லை என்ற உறுதியுடன் வகுப்பில் உட்கார்ந்திருந்தான்.

''ஒரு புத்தகம் எத்தனை எத்தனை நிகழ்ச்சியை உண்டு பண்ணிவிட்டது பார்த்தீர்களா! '' என்று ஆங்கில ஆசிரியர் வகுப்பில் அருமையாகப் பேசிக் கொண்டிருந்தார்.

# 4. நல்ல தலைவன்

மூர்த்தியைக் கண்டால் இளங்கோவுக்குப் பிடிக்காது. பிடிக்கவே பிடிக்காது. அவ்வளவு வெறுப்பு. ஏன் என்றால், மூர்த்தியை இளங்கோ எதிரியாகவே நினைத்தான். இருவரும் ஒரே வகுப்பில்தான் படித்து வந்தார்கள்.

கால் பந்தாட்டத்தில் இருவரும் கெட்டிக்காரர்கள். யார் நன்றாக



ஆடுகின்றார்கள் என்று பிரித்துக் கூற முடியாத அளவுக்கு, சிறப்பாக ஆடும் ஆட்டக்காரர்கள். இளங்கோ அந்த மாவட்டம் முழுவதிலுமிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 11 ஆட்டக்காரர்களில் ஒருவனாக இருந்தான்.

அவன் மாவட்ட விளையாட்டு வீரன் என்பதால் பள்ளியில் அவனைப் பாராட்டிப் பேசினார்கள். பரிசும் கொடுத்தார்கள். இருந்தாலும் இளங்கோவுக்கு மனதில் நிம்மதி இல்லை.

அந்தப் பள்ளிக்கூட கால்பந்தாட்டக் குழுவிற்கு மூர்த்தியே குழுத்தலைவனாக நியமிக்கப்பட்டிருந்தான்.

குழுத் தலைவன் பதவி தனக்குக் கிடைக்கவில்லையே என்பதுதான் இளங்கோவின் மனக்குறை.

எப்படியாவது மூர்த்திக்கு கெட்ட பெயர் வாங்கித் தந்து, அவனிடமிருந்து குழுத் தலைவன் பதவியைத் தான் வாங்கிக் கொள்ள வேண்டும் என்று மனதுக்குள்ளே திட்டம் போட்டுக் கொண்டிருந்தான். ஆனால், அதை யாரிடமும் சொல்லாமல், ரகசியமாகவே வைத்திருந்தான். அதற்காக மறைமுகமாக ஒரு

சில காரியங்களைச் செய்தான்.

கால்பந்தாட்டக் குழுவில் உள்ள ஆட்டக்காரர்கள் அனைவரையும், முதலில் தன் பக்கம் இழுத்துக் கொள்ள வேண்டும் என்பது முதல் திட்டம். பிறகு, அவர்களை வைத்தே உடற்கல்வி ஆசிரியரிடம் கூறி, தன்னைக் குழுத் தலைவனாக ஆக்கச் செய்ய வேண்டும். அதற்குள், மூர்த்திக்குக் கெட்ட பெயர் வாங்கித் தந்து விட வேண்டும்.

இந்தத் திட்டத்தை மனதில் வைத்துக் கொண்டு, இளங்கோ எல்லோரிடமும் பழக ஆரம்பித்தான்.

இளங்கோ தலைக் கனம் உள்ளவன். கர்வம் பிடித்தவன் என்பது எல்லோருக்கும் தெரியும். இருந்தாலும், அவன் பழக ஆரம்பித்தவுடன், எல்லோரும் இவன் பின்னே சுற்ற ஆரம்பித்தார்கள். அவர்களுக்கு அவ்வப்போது, ஓட்டலில் ‘டிபன்’ வாங்கிக் கொடுத்தும் வந்தான். இளங்கோவைப் போல கெட்டிக்காரன் கால் பந்தாட்டத்தில் யாருமில்லை என்று அவர்கள் பேசிக் கொள்ளும் படி செய்துவிட்டான்.

அதுமட்டுமல்ல. மூர்த்தியைப் பற்றி

அடிக்கடி குறை சொல்வான். அவனுக்கு ஒன்றும் தெரியாது என்பான். குருட்டுப் பூனை விட்டத்தில் தாவி நின்றதுபோல, குருட்டு அதிர்ஷ்டத்தால் அவனுக்குக் குழுத் தலைவன் பதவி கிடைத்து விட்டதென்று இளங்கோ சொல்லியதை எல்லோரும் நம்பினார்கள். வேறுவழி! அவன் வாங்கித் தரும் தின்பண்டங்களுக்காக அல்லவோ அவர்களும் கூடவே திரிந்தார்கள்.

வகுப்புக்களுக்கு இடையே வருடந்தோறும் விளையாட்டுக்கள் நடக்கும். வழக்கம் போல, அந்த வருடமும் கால்பந்தாட்டத்தில் போட்டியை நடத்த ஆரம்பித்தார் உடற்கல்வி ஆசிரியர். மூர்த்தியும் இளங்கோவும் பத்தாம் வகுப்பு 'அ' பிரிவைச் சேர்ந்தவர்களுக்கும் பள்ளிவிட்டதும் கால்பந்தாட்டப் போட்டி என்று ஆசிரியர் அன்று அறிவித்துவிட்டார்.

இரண்டு குழுக்களும் மாலை 4 மணிக்கு விளையாடத் தயாராக இருக்க வேண்டும் என்று அறிவிப்பு வந்து விட்டது. இப்பொழுது யார் நம் குழுவிற்குத் தலைவனாக இருக்க வேண்டும் என்ற பேச்சு வந்தது. எல்லோரும் இளங்கோதான் குழுத் தலைவனாக இருக்க வேண்டும் என்று கூறினார்கள். மூர்த்தியும்

அதுவே சரி என்று கூறினான்.

ஆனால், இளங்கோ அதை ஏற்றுக் கொள்ளவில்லை. பள்ளிக்கும் மூர்த்தியே குழுத் தலைவன். ஆகவே, வகுப்புக்கும் அவனே குழுத் தலைவனாக இருக்க வேண்டும். அத்துடன் மூர்த்தி நல்லவன். அதிக அனுபவம் உள்ளவன். விளையாட்டில் கெட்டிக்காரனும் ஆவான் என்று இளங்கோ புகழ்ந்து பேசினான்.

அவன் பேசியது உண்மையில் விருப்பத்துடன் அல்ல. வஞ்சகமாகப் பேசினான். எப்படியும் குழுத் தலைவன் பதவியை மூர்த்திக்குத் தந்து, அவனுக்குக் கெட்டப் பெயர் வாங்கித் தந்து விட வேண்டும் என்பது தானே அவன் திட்டம்!

மூர்த்தி முதலில் மறுத்துப் பார்த்தான். மாவட்ட விளையாட்டு வீரன் இளங்கோவே தலைவனாக இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டான். இளங்கோ ஒத்துக் கொள்ள வில்லை. நாளை மறுநாள் மாவட்ட விளையாட்டுப் போட்டியில் முதல் முறையாக விளையாடப் போகிறேன். அந்தப் பெருமை எனக்குப் போதும். இது வேண்டாம்! என்று

முடியவில்லை.

எதையும் எளிதாக நம்புகின்ற மூர்த்தியும் கடைசியில் சரி என்றான். இளங்கோவின் நல்ல மனதைப் பாராட்டினான். மாவட்டத்தில் சிறந்த ஆட்டக்காரனாக வந்து, நல்ல புகழ் பெற வேண்டும்என்று வாழ்த்தினான். இளங்கோ புன்னகை செய்தான். அவனது திட்டம் அவனுக்குத் தானே தெரியும்!

மாலையில் கால்பந்தாட்டப் போட்டி தொடங்கியது. இரண்டு குழுக்களையும் முதலில் அறிமுகப்படுத்தி வைத்தார் உடற்கல்வி ஆசிரியர். அவரே நடுவராகவும் இருந்தார். விளையாட்டில் அதிக ஆர்வம் உடைய தலைமை ஆசிரியர் ஏதோ அவசரவேலையாய் வெளியே போய் விட்டார். ஆனால் விளையாட்டில் விருப்பமுள்ள மாணவர் கூட்டம்,மைதானத்தைச் சுற்றி நிறைந்திருந்தது.

ஆசிரியரின் விசில் ஒலி கேட்டதும் இரண்டு குழுவினரும் பாயும் புலிகளைப்போல, பந்தை நோக்கிப் பாய்ந்தனர். பந்தை உதைத்தனர், மேலே பறக்கச் செய்தனர். வேடிக்கை பார்க்கும் மாணவர்களுக்கோ அதிக

உற்சாகமாக இருந்தது. அத்துடன் மூர்த்தியும் இளங்கோவும் சேர்ந்து ஆடியது, ஆட்டம் பார்ப்பதற்கு இன்னும் பரபரப்பாகவும் இருந்தது.

இந்த நேரத்தில் தான் இளங்கோ தன் திட்டத்தை செயல்படுத்த நினைத்தான். அவன் திடீரென்று, அடுத்த குழு ஆட்டக்காரரை இடிக்க ஆரம்பித்தான். விதிகளுக்கு மாறாக ஆடினால் தவறல்லவா! அதனால், நடுவர் அதைத் தவறு என்று கூறி முதலில் கண்டித்தார். அவன் மீண்டும் மீண்டும் ஒன்றும் தெரியாதவன் போல தவறு செய்யவே நடுவர் தண்டிக்கவும் ஆரம்பித்தார்.

உடனே இளங்கோ தன் குழு ஆட்டக்காரர்களிடம் நடுவராகிய உடற்கல்வி ஆசிரியர், வேண்டுமென்றே தனக்கு எதிராக விசில் ஊதுகின்றார் என்று கூற ஆரம்பித்தான். தன் குழுவைத் தோற்கடிக்க ஆசிரியர் முயற்சிக்கிறார் என்று குற்றம் சாட்டினான். மற்றவர்களையும் நம்பச் செய்தான். மூர்த்தியிடமும் இதையே கூறினான்.

அடிக்கடி தவறுக்கு தண்டனை தந்து கொண்டேயிருந்தார் நடுவர். உடனே, இளங்கோ ஒரு முடிவுக்கு வந்தான். நம்மைத்

தோற்கடிக்க முயல்கிறார் ஆசிரியர். அதனால் நாம் இனிமேல் ஆடவேண்டாம். ஆடுகளத்தை (மைதானத்தை) .விட்டு வெளியே போய்விடலாம் என்று யோசனை கூறினான்.

எல்லோரும் சரி என்றார்கள். மூர்த்தியிடமும் கூறினார்கள். ஆசிரியர் செய்வது அநியாயம் என்று சத்தம் போட்டனர். நாங்கள் விளையாட மாட்டோம் என்று ஆட மறுத்தனர். மூர்த்தியை அழைத்துக் கொண்டு வெளியே வந்துவிட்டனர். மூர்த்தியால் பேச முடியவில்லை. அவன் விருப்பம் இல்லாமலேயே வெளியே . எல்லோரும் வந்துவிட்டனர், அவனும் வெளியே வந்து விட்டான். ஆசிரியர் வந்து அழைத்தும், யாரும் போகவில்லை. மூர்த்திக்குப் பேச சந்தர்ப்பமே இல்லை.

ஆட்டம் முடிந்துவிட்டது என்று ஆசிரியர் அறிவித்து விட்டார். எதிர்க்குழு வெற்றி பெற்றது என்றும் கூறினார். அதைப் பற்றி தலைமை ஆசிரியரிடம் புகார் செய்வதாகவும் கூறி விட்டார்.

மறுநாள் காலை, பத்தாம் வகுப்பு 'அ' பிரிவு விளையாட்டு வீரர்கள் அனைவரையும் தலைமை ஆசிரியர் அழைப்பதாக, பியூன் வந்து

கூறினான். மூர்த்தி முன்னே நடந்தான். அவன் பின்னே மற்றவர்கள் சென்றார்கள் கடைசியாக இளங்கோ வந்தான். தனது திட்டம் பலிக்கப் போகிறது என்று மனதுக்குள்ளே மகிழ்ச்சியடையந்தான்.

தலைமை ஆசிரியர் முன்னே எல்லா மாணவர்களும் நின்றார்கள். தலைமை ஆசிரியர் கோபமே உருவாக நின்றார்.

''ஒழுக்கம் கற்றுக் கொள்ளத்தான் நீங்கள் பள்ளிக்கு வருகின்றீர்கள். கடமையும் கட்டுப்பாடும் கற்றுக் கொள்ளத்தான் நீங்கள் விளையாடுகின்றீர்கள். ஆசிரியரிடம் பணிவாக நடந்துகொள்ளாமல், அவமரியாதையாக நடந்து கொள்வதென்றால், உங்களுக்கு இந்த விளையாட்டே வேண்டாம். இனிமேல் நீங்கள் எல்லோருமே விளையாடும் மைதானத்திற்குப் போகவேண்டாம். நீங்கள் இனி எந்த விளையாட்டிலும் கலந்து கொள்ளக் கூடாது. நீங்கள் போகலாம்.''

தலைமை ஆசிரியர் கோபமாகக் கூறியதைக் கேட்ட மாணவர்களில் ஒருவன், நாங்கள் விளையாடத்தான் இருந்தோம். எல்லோரும் வெளியே வந்துவிட்டதால், நாங்கள்

ஆடமுடியாமல் போய்விட்டது. எங்கள் மேல் தவறில்லை என்றான்.

தலைமை ஆசிரியர் இளங்கோவைப் பார்த்தார். ''நம் மாவட்டத்தில் நீ ஒரு நல்ல விளையாட்டு வீரன் என்பதால் தான் உன்னைத் தேர்ந்தெடுத்திருக்கின்றார்கள். நீயோ ஒழுங்கு கட்டுப்பாடு என்பது தெரியாமல் இருக்கிறாய். நம் பள்ளியின்கௌரவம் என்னாவது? எனக்கு மிகவும் வேதனையாகவும் அவமானமாகவும் இருக்கிறது'' என்று கோபமாகக் கேட்டார்.

''இளங்கோ ஓரடி முன்னே வந்து நின்று கொண்டு ஒழுங்கும் கட்டுப்பாடும் இருந்ததால்தான் இப்படி நடந்து கொண்டேன் சார்'' என்றான்.

என்ன உளறுகிறாய்? அதிகப் பிரசங்கித்தனமாய் ஆட்டத்தை விட்டு வெளியே வந்ததும் இல்லாமல், அதற்கும் சமாதானம் கூறப்போகிறாயா? என்று கொஞ்சம் கோபமாகவே கேட்டார். கொஞ்சங்கூட பொறுப்பில்லாதவர்கள் என்று முனகியபடி எல்லோரையும் ஒரு முறை பார்த்தார்.

நாங்கள் ஆட்டக்காரர்கள் தான். எங்களுக்குத் தலைவன் ஒருவன் உண்டு.

தலைவன் சொற்படி கேட்க வேண்டியது எங்கள் கடமை. குழுத்தலைவன் ஆடியது போதும் என்றால், கட்டுப்பாடு உள்ள நாங்கள் எப்படி எதிர்த்துப் பேச முடியும்? உத்தரவிற்குக் கட்டுப்பட்டு, நாங்கள் வெளியே வந்து விட்டோம். மைதானத்திற்குள் குழுத்தலைவன் தான் எங்களுக்கு எல்லாம். குழுத்தலைவன் பேச்சைக் கேட்டது தவறு என்றால், நீங்கள் என்ன தண்டனை கொடுத்தாலும் ஏற்றுக் கொள்கிறேன்' என்றான் இளங்கோ!

''யார் உங்கள் குழுத்தலைவன்?'' தலைமை ஆசிரியர் கண்கள் கோபத்தால் சிவந்து போயின.

மூர்த்தி சார்! எல்லோரும் ஒரே நேரத்தில் சத்தமாகக் கூறினார்கள்.

''குழுத்தலைவன் என்றால் பெரிய இவன் என்று எண்ணி விட்டாயா? அவ்வளவு திமிர் உனக்கு எப்படி வந்தது ? இதுவரை நமது பள்ளியில் இப்படி ஒரு நிகழ்ச்சி நடந்ததில்லையே! உன் மனதில் நீ என்ன நினைத்துக்கொண்டிருக்கிறாய்?'' என்று தலைமை ஆசிரியர் படபடத்தார்.

மூர்த்திக்கு ஒன்றுமே புரியவில்லை. தன்

மீது எல்லா மாணவர்களும் குற்றம் சாட்டுவார்கள் என்று எதிர்பார்க்கவே இல்லை. இப்பொழுது இளங்கோவும், தன்னைப் பற்றித் தவறாகத் தலைமை ஆசிரியரிடம் கூறியதும் தடுமாறிப் போய் விட்டான்.

தலைமை ஆசிரியர் தன்னை நோக்கிக் கோபமாகப் பேசியதைக் கேட்டதும், மூர்த்தி தடுமாறிப் போனான்.

சார்...நான் ஒன்றும் ...யாரிடமும் சொல்லவில்லை என்று குழம்பியபடி பேசினான்.

உன் பதில் எனக்குத் தேவையில்லை. நேற்று செய்தது குற்றம். இன்று நீ பொய் பேசி அதை மறைக்க வேண்டாம். நீ செய்த குற்றத்திற்கு என்ன தண்டனை தெரியுமா?

''நான் யாரிடமும் எதுவும் சொல்லவில்லை சார். என் பேச்சை நம்புங்கள்!'' என்றான்.

''இத்தனை பேர் சொல்வது பொய். நீ சொல்வது மட்டும் தான் உண்மை. அப்படித்தானே! இதோ பார் மூர்த்தி! இதுவரை நீ பள்ளிக்கூட கால்பந்தாட்டக் குழுவிற்குத் தலைவனாக இருந்தது போதும். இன்றிலிருந்து உன்னை நீக்கியிருக்கிறேன். இந்த ஆண்டு

முழுவதும் நீ எந்த விளையாட்டிலும் கலந்து கொள்ளக் கூடாது. இதுதான் உனக்கு சரியான தண்டனை. நீ போகலாம்! '' என்றார்.

மூர்த்தி தலைமை ஆசிரியருக்கு வணக்கம் செய்து விட்டு, தலைகுனிந்தபடியே வெளியே வந்தான். இளங்கோவின் முகத்தில் சந்தோஷம் கூத்தாடியது. தன் திட்டம் பலித்தது என்று தன் இரண்டு கைகளையும் அடிக்கடி குலுக்கிக் கொண்டான்.

''இனிமேல் உங்கள் குழுவிற்கு யார் தலைவனாக இருக்க வேண்டும் என்பதை நீங்களே தீர்மானித்துக் கொள்ளுங்கள்!''

''எங்களுக்கு இளங்கோதான் வேண்டும் என்று எல்லோரும் கத்தினார்கள்.

''நான் இளங்கோவை குழுத்தலைவனாக ஆக்கியிருக்கிறேன். இதை உடற்கல்வி ஆசிரியரிடம் கூறுங்கள். நீங்கள் எல்லோரும் பண்புள்ளவர்களாக ஒழுக்கத்துடன் நடந்து கொள்ளவேண்டும்'' என்று கூறி, நீங்கள் போகலாம் என்றார்.

இளங்கோ குழுத்தலைவன் என்றதும், அவனை சூழ்ந்து கொண்டு எல்லோரும் கைகுலுக்கினார்கள். அவனை அங்கும் இங்கும்

தள்ளி கட்டிப் பிடித்துக் கொண்டார்கள். தலைமை ஆசிரியர் அருகில் உள்ள மேஜை மீது ஒரு பெரிய வெற்றிக் கேடயம் (Shield) இருந்தது. அதன் மேல் போய் மோதிக் கொண்டார்கள்.

அந்தக் கேடயம் தவறி இளங்கோவின் முன் பாதத்தில் விழுந்தது. அது பெரிய கேடயம், மாவட்டத்தில் கால்பந்தாட்டத்தில் சென்ற ஆண்டு வெற்றி பெற்றதற்காகக் கொடுக்கப்பட்டது. இளங்கோ ' ஐயோ' 'அம்மா' என்று அலறினான்.

கொஞ்ச நேரத்திற்குள் இளங்கோவின் பாதம் வீங்கிப் போயிற்று. வலி பொறுக்க முடியாமல் அலறினான்.

ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகலாம் என்றார் தலைமை ஆசிரியர். பள்ளிக்கு வெளியே நின்று கொண்டிருந்த சைக்கிள் ரிக்ஷா கொண்டுவரப்பட்டது. அதில் இளங்கோவை ஏற்றிக் கொண்டு சென்றார்கள்.

டாக்டர் எக்ஸ்ரே எடுத்துப் பார்த்தார். பரிசோதனை செய்தார். கால் நன்றாக நசுங்கி எலும்பு உடைந்திருக்கிறது கால் தேறுவதற்கு சுமார் ஆறுமாதம் கூட ஆகலாம் என்று கூறினார்.

டாக்டர்! நான் நாளை மறுநாள் மாவட்டக் கால் பந்தாட்டப் போட்டிக்குப் போயாக வேண்டுமே என்று அலறினான் இளங்கோ!

''இந்தக் கட்டிலைவிட்டு நீ எழுந்திருக்கவே கூடாது. காலில் கட்டுப் போடப் போகிறோம்'' என்று அவனை பேச வேண்டாமென்று தடுத்தார் டாக்டர்.

காலில் கட்டுப் போட்டாயிற்று. காலை அசைக்கக் கூடாது என்று உத்திரவும் வந்தது. தனியே படுத்தவாறு, இளங்கோ அழுது கொண்டிருந்தான்.

மாவட்ட விளையாட்டு வீரன் நான், வகுப்பிற்கு விளையாடும் குழுவிற்குத் தலைவனாக ஆகவேண்டும். என்பதற்காக, எவ்வளவு பெரிய பொய் சொன்னேன். அந்த மூர்த்தியின் மனம் எவ்வளவு வேதனைப்பட்டிருக்கும்! இப்பொழுது மாவட்டத்திற்காக விளையாட முடியாமற் போயிற்றே என்று நினைத்தான். கண்ணீர் ஆறாகப் பெருகி ஓடிக் கொண்டிருந்தது.

செய்தி கேட்டு மூர்த்தி ஓடி வந்தான். அவன் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு, கவலைப்படாதே இளங்கோ! நாளைக்கே கால்

சரியாகப் போய்விடும். நீ போய் நம் மாவட்டத்திற்காக நன்றாக ஆட வேண்டும். அதுதான் என் பிரார்த்தனை' என்று ஆறுதல் கூறினான்.

''என் எலும்புகள் நசுங்கி விட்டன! 'ஆனால் என்னால் கால் பந்தாட்டம் ஆட முடியுமா என்று டாக்டர் சந்தேகப்படுகிறார்'' என்றான் இளங்கோ.

உன் நல்ல மனதுக்கு ஒன்றும் ஆகாது. சீக்கிரம் நீ தேறிவிடுவாய். நீ பெரிய வீரனாக ஆகத்தான் போகிறாய்! நிச்சயம் இது நடக்கத்தான் போகிறது என்று மூர்த்தி தைரியம் சொல்லிக் கொண்டே போனான்.

மூர்த்தி! நான் உன் மேல் பழி போட்டேன். தலைமை ஆசிரியரிடம் தண்டனை வாங்கித் தந்தேன். ஆனால் நீயோ அதைப்பற்றி ஒன்றும் பேசாமல் இருக்கிறாயே?

அதுவா! தலைவன் என்றால் நல்லதையும் ஏற்றுக் கொள்ள வேண்டும். அதுபோல, பழியையும் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். உங்களை தடுத்து நிறுத்த முடியாத எனக்கு, அது சரியான தண்டனைதான்! அது எனக்கு சந்தோஷம் தான். வருத்தமே அல்ல என்றான்

மூர்த்தி!

''என்னை மன்னித்துவிடு மூர்த்தி! உனக்கு துரோகம் செய்தேன். நாம் வாங்கி வைத்த வெற்றிக் கேடயத்திற்கே அந்தத் துரோகத்தை கேட்கப் பொறுக்காமல், என் காலில் விழுந்து தண்டித்துவிட்டது. விளையாட்டு வீரர்கள் தவறு செய்தால், அது ஆண்டவனுக்கு மட்டுமல்ல. பரிசு பொருளுக்குக் கூட பொறுக்காது போலும்.''

''இனிமேல் நான் உண்மையான விளையாட்டு வீரனுக்குரிய ஒழுக்கம், கட்டுப்பாடு, பெருந்தன்மை, பண்பாட்டுடன் நடந்து கொள்வேன்'' என்றான் இளங்கோ!

''உன் மனம்போல நடக்கட்டும்'' என்றான் மூர்த்தி. மனதில் எந்தவித களங்கமும் இன்றி இளங்கோ பேசினான்.

அது அவனது உடல் வலியைப் போக்கியது. மனதுக்கு நல்ல சந்தோஷத்தை அளித்தது.


'நீதான் நல்ல தலைவன். உன்னைப்போல நானும்' என்று கூறிய இளங்கோவை, மூர்த்தி அன்புடன் கட்டித் தழுவிக் கொண்டான்.

தன்னை சேர்ந்தவர்கள் தவறுகளை

மன்னிக்கவும், முடிந்தால் திருத்தவும், திருந்திய பிறகு முன்போல அன்பு பாராட்டுவதும் தான் நல்ல தலைவனுக்கு உரிய பண்புகளாகும்.


மூர்த்தி நல்ல தலைவனாக இருந்தான். அதனால்தான் இளங்கோ திருந்தினான். இணையிலாத நண்பனாக மாறினான். இப்பொழுது இருவரும் அன்பு நண்பர்களாக ஆகி விட்டார்கள்.

அன்பு எவரையும் வெல்லும் என்பது எவ்வளவு உண்மை பாருங்கள்!



# 5. நல்ல பரிசு

குமார் தன் நண்பன் கோபுவின் சைக்கிளைப் பார்த்துக் கொண்டேயிருந்தான். புதிய சைக்கிள். பார்ப்பதற்கு மிகவும் அழகாக இருந்தது. கோபு அதில் உட்கார்ந்து ஓட்டினான். பக்கத்தில் நின்று கொண்டு இருந்த குமாரையும் பெருமையுடன் பார்த்தான்.



குமாருக்கு சைக்கிள் ஓட்ட வேண்டும் என்று ஆசை வந்து விட்டது. ஒரு தடவை ஓட்டிப் பார்க்க வேண்டுமென்று கோபுவைக் கேட்டான்.

'எங்க அப்பா திட்டுவார்' என்று கோபு இல்லையென்று சொல்லி விட்டான்.

வீட்டிற்குள் ஓடினான் குமார். அம்மாவிடம் தனக்கும் ஒரு சைக்கிள் வேண்டுமென்று கேட்டான்.

அவர்கள் பணக்காரர்கள். சைக்கிள் வாங்க முடியும். நம்மால் முடியாதே என்றாள் குமாரின் அம்மா.

''நான் அப்பாவையும் கேட்பேன்'' என்றான் குமார். வெளியே வந்தான் வேகமாக கோபு வந்து குமாரை கூப்பிட்டான்.

இந்தா ஓட்டு என்று தன் புதிய சைக்கிளைத் தந்தான். குமாருக்கு ஒரே ஆச்சரியமாக இருந்தது. ''இதுவரை கெஞ்சிக் கேட்டேன் இல்லையென்றான். இப்பொழுது கொடுத்து விட்டானே''

குமார் நினைத்துக் கொண்டே சைக்கிளை ஓட்டினான். நண்பன் கோபுவை மனதுக்குள் பாராட்டினான். அவனுக்கு ஆனந்தமாக இருந்தது. கோபுவும் பின்னால் ஓடி வந்து கொண்டிருந்தான்.

வேகமாக சைக்கிளை ஓட்டினான் குமார். திடீரென்று சைக்கிளை மிதித்து ஓட வைக்கும் 'பெடல்' கீழே விழுந்து விட்டது. சைக்கிளை நிறுத்தி இறங்கினான். அதற்குள் கோபு அழ ஆரம்பித்து விட்டான்.

என் புதிய சைக்கிளை உடைத்து விட்டாயே! என் அப்பா என்னை அடிக்கப் போகிறார்! நீ தானே உடைத்தாய்? வா என் வீட்டுக்கு' என்று சைக்கிளை தள்ளியபடியே கூப்பிட்டான் கோபு.

குமாருக்கு ஒன்றும் புரியவில்லை. கோபு வெளியில் குமாரை நிற்க வைத்து விட்டு, வீட்டுக்குள் ஓடினான். கோபுவின் அம்மா வேகமாக வந்தாள்.

ஏண்டா குமார்! புதிய சைக்கிளை ஏன்

உடைத்தாய்! ஐயோ! கோபுவின் அப்பா ரொம்பக் கோபக்காரர் ஆயிற்றே! அவனை அடிப்பாரே!

குமாரை பயமுறுத்தி விட்டாள். தானும் தன் அப்பாவிடம் அடிவாங்க வேண்டுமென்ற நினைவு வந்தவுடன். அவனும் அழத்தொடங்கினான்.

அழுகை சத்தம் கேட்டு குமாரின் அம்மா ஓடி வந்தாள். குமாரின் அம்மாவும், கோபுவின் அம்மாவும் சைக்கிளைப் பற்றி சண்டைப் போட்டுக் கொண்டார்கள்.

கடைசியாக, குமார்தான் சைக்கிள் பெடலை உடைத்தான் என்று குமாரின் அம்மா ஒத்துக் கொண்டான். அற்கான செலவாக ஐந்து ரூபாயும் கொடுத்து, கோபுவின் அப்பா வருவதற்குள் சரி செய்து விடுமாறும் கேட்டுக் கொண்டாள்.

கோபு சிரித்துக் கொண்டே, சைக்கிளைத் தள்ளிக் கொண்டு சைக்கிள் கடைக்குப் போனான். குமார் மிகவும் மனவருத்தத்துடன்

வீட்டிற்குப் போனான்.

''ஒரு தடவை ஓட்டியதற்கு ஐந்து ரூபாய் அபராதமா? பிறருடைய எந்தப் பொருளையும் கேட்கக் கூடாது. பயன் படுத்தக் கூடாது என்று எத்தனையோ முறை உனக்கு சொல்லியி ருக்கிறேனே? நீ ஏன் புரிந்து கொள்ள மாட்டேன் என்கிறாய்'' என்று அம்மா, குமாருக்கு புத்திமதி சொல்லிக் கொண்டிருந்தாள்.

ஆசையாக இருந்தது. இனிமேல் நான் யார் விளையாட்டுப் பொருளையும் எடுத்து விளையாட மாட்டேன். என்று அம்மாவிடம் மன்னிப்பு கேட்டுக் கொண்டிருந்தான்.

கோபுவின் அம்மா குமார்! குமார்! என்று அழைத்துக் கொண்டே வீட்டிற்கு வந்தாள். குமாருக்கு மீண்டும் சண்டை போட வந்து விட்டாளோ என்று பயந்து கொண்டே, பதில் சொன்னான்.

''என்னை மன்னித்து விடு! குமார். உன் கூட வீணாக சண்டை போட்டு விட்டேன்''

என்று குமாரிடம் கூறி, குமாரின் அம்மாவிடமும் மன்னிப்பு கேட்டான்.

குமாருக்கும் குமார்அம்மாவுக்கும் ஒன்றுமே புரிய வில்லை. குமார் சைக்கிளை உடைத்ததற்கு, நாங்கள் அல்லவோ மன்னிப்பு கேட்க வேண்டும் என்றான் குமாரின் அம்மா.

என் பையன் கோபுதான் பொய் சொல்லி விட்டான்.

பொய்யா? எப்படி என்றான் குமார்.

''கோபு சைக்கிளை ஓட்டும் போதே, பெடல் உடைந்து போய் விட்டிருக்கிறது. அவன் உடைத்துவிட்டான் என்றால், அவன் அப்பா அடிப்பார் என்று பயந்து கொண்டுதான், அந்தப் பழியை குமார் மீது போட்டு விட்டான்.

''அதுதானே பார்த்தேன். ஒரு தடவை கூட சைக்கிள் ஓட்டத் தராத கோபு, எப்படி சைக்கிளைத் தந்தான்'' என்றான் குமார்.

நீ உடைத்தால், அவன் அப்பா உன்னைக் கோபிக்க மாட்டார் என்று தான் உன்னைச்

சொல்லி விட்டான்.

அதையும் நான் நம்பி உங்களிடம் சண்டை போட்டு விட்டேன் இதோ நீங்கள் தந்த ஐந்து ரூபாய்! எங்களைத் தவறாக நினைக்கக் கூடாது என்று கேட்டுக் கொண்டாள்.

குமாரின் அம்மா சமாதானம் செய்து அனுப்பினாள்.

குமார்! ''பொய் சொல்வது வேறு. அதுவும் பிறர் மேல் வேண்டுமென்றே பொய் சொல்லித் தண்டனை வாங்கித் தருவது பாவம்'' என்றாள் குமாரின் அம்மா!

''கனவிலும் கூட நான் கோபு மாதிரி பொய் சொல்ல மாட்டேன்'' என்றான் குமார்.


''நீ நன்றாகப் படித்து, தேர்விலே முதல் மார்க் வாங்கு. நான் உனக்கு புதிய சைக்கிள் வாங்கித் தர ஏற்பாடு செய்கிறேன்'' என்று அம்மா கூறியதும், புதிய சைக்கிள் வந்து விட்டது போலவே மகிழ்ந்து, புத்தகத்தைப் பிரித்துப் படிக்கத் தொடங்கினான் குமார்.

''உண்மையான உழைப்பில் கிடைப்பது எல்லாம் நல்ல பரிசு தான்' என்று அம்மா கூறியதும், குமார் ஆமாம் என்பது போல் தலையாட்டியது பார்ப்பதற்கு அழகாக இருந்தது.



# பண்பு தரும்

# அன்புக் கதைகள்



டாக்டர். எஸ். நவராஜ் செல்லையா

M.A.; M.P.Ed.; Ph.D.; D.Litt.; D.Ed.; FUWAI